இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி


Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 111 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 14 – வியாழக்கிழமை 30 நவம்பர் 2023 – கோவை ★ ★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 111: Thiruvalluvar Year - 2054 - Karthigai 14 - Thursday 30 November 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (7)

# இளைஞர்கள் - புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இந்தத் தொடர் கட்டுரை வரிசையினை, நான் ஒன்றும் இளைஞர்களைப் பற்றி எழுத வேண்டுமென்ற திடீர் அக்கறை காரணமாக எழுதவில்லை. இளைஞர்களால்தான் இலட்சிய வெறியோடு எதையும் சாதிக்க முடியும் என்பதை, அவர்கள் இந்த, பரந்த உலகில் பல்வேறு நாடுகளில் இளம் வயதில் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்ற சான்றுகள் என் நெஞ்சில் நிழற் படங்களாக விரிந்து கொண்டிருப்பதால் தான் அவற்றை இதுபோன்ற நேரங்களில், நெல்லையில் மாநில இளைஞர் அணி மாநாடு நடைபெறுகின்ற இந்த மகத்தான சமயத்தில் நினைவுபடுத்துவதும், அந்த அடிப்படையில் நான் தரும் சரித்திர குறிப்புகள் வளரும் இளைஞர் சமுதாயத்திற்கு புதிய ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிப்பதோடு, ஏற்கெனவே வளர்ந்து விட்ட மூத்த முன்னோடிகளுக்கு நாட்டின் அல்லது சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பற்றி முழுமையான நம்பிக்கையையும் ஊட்ட வல்லது என்பதால்தான், இன்றைய இளைஞர் சமுதாயம் சிலிர்த்தெழவும், மூத்த முன்னோடிகள் உறுதியுடன் நிமிர்ந்து நடக்கவும் பயன்படும் என்றும் - பயன்பட வேண்டுமென்றும் தணியாத ஆசையுடன் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றேன். அந்தத் தங்க நிகர் வீரர்களின் தன்மானம் குன்றா தகைவுறு வரலாறுகளை!

அந்த வரிசையில் எத்தனை எத்தனை தலைவர்கள் - எத்தனை எத்தனை வித்தகர்கள் - எத்தனை எத்தனை மேதைகள் - எத்தனை எத்தனை விற்பன்னர்கள் “விளையும் பயிர் முளையிலே தெரியும்” என்பதைப் போல, தங்கள் வாழ்க்கையை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு வயலாகவும், எருவாகவும் ஆக்கித் தந்திருக்கின்றார்கள் என்பதை நான் மட்டுமல்ல! நீயும், உன் போன்ற உடன்பிறப்புக்களும் அறிந்து கொள்வதற்காக - உனக்கிருக்கும் காலம் கருதி, நேரம் கருதி விரிவாகத் தர விரும்பாமல், அந்தக் கொள்கை சீயங்கள் கடந்து வந்த கல்லும் முள்ளும் நிறைந்த வழிகள், காட்டாறுகள், கள்ளிக்காடுகள், வீசிய புயல்கள், அதிர்ந்த பூகம்பங்கள் - இவற்றையெல்லாம் கடந்து நடத்திய தீரமிகு பயணங்களை - அந்த உலகம் போற்றும் உயர்ந்த மனிதர்களை - வெற்றியாயினும், தோல்வியாயினும் தலை வணங்காமல் அவர்கள் சந்தித்த நெஞ்சு நிமிர்த்திடும் நிகழ்வுகளாயினும் - அனைத்தையும் இந்த நேரத்தில் உன் போன்ற உடன் பிறப்புக்களுக்கு - ஒரு கிண்ணத்தில் உள்ள பாலையோ, தேனையோ அப்படியே பிள்ளையின் வாயில் கொட்டிவிட வேண்டுமென்று எண்ணுகின்ற தாயைப் போல் இல்லாமல், படிப்படியாக மனதில் பதிய வைக்கின்ற பாடங்களாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் வரலாற்று நாயகர்களின் வாழ்க்கையின் உண்மைக் கதைகளை உங்கள் செவிகளுக்கு மட்டுமே எட்டும்படியாக இல்லாமல் - சிந்தையிலும் பதிந்து நிற்கும்படியாக ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி வரைகின்றேன், சுருக்கமாக! ஆனால் சுவையாக! நான் எழுதுகின்ற அதே உணர்வுடன் நீங்களும் படிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்!

## கலைஞர் கடிதம்

அந்த உலக நாயகர்களில் மகத்தான மனிதர்கள், கார்ல் மார்க்ஸ், ப்ரடரிக் ஏங்கெல்ஸ், லெனின் ஆகிய இவர்களைப் பற்றியெல்லாம் எழுதியிருக்கிறேன்; ஏட்டில் அல்ல, இளைஞர்களின் இதயங்களில்! அந்த வரிசையில் இதோ! ஒரு சின்னஞ்சிறிய நாட்டில் சிங்கக் குட்டியாக உலவி பெருமைக்குரிய புரட்சித் தலைவனாக வளர்ந்த பிடல்காஸ்ட்ரோ நான் மறக்க முடியாத மாவீரர்களில் ஒருவர். கியூபா மண்ணின் நெஞ்சம் நிறைந்த அந்தத் தலைவனைப் பற்றியும் அவன் நடத்திய போராட்டத்திற்குத் துணை



30 வயதில் பிடல் காஸ்ட்ரோ

நின்ற தளபதிகளாக இருந்தோர், பொறுமை காத்து பொறுப்பேற்றோர் ஆகிய இவர்களைப் பற்றியும், அந்தக் கியூபா நாட்டின் பெருமை போற்றும் விழா ஒன்று 2006ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் சென்னையில் நடைபெற்றபோது, அந்த மாநாட்டில் நான் வழங்கிய கவிதையில் சில வரிகளை மட்டும் இந்த நேரத்தில் நினைவூட்டிட விரும்புகின்றேன்.

**உயிரோடிருக்கும் உலகத் தலைவர்கள் வரிசையில்**
**உங்களைக் கவர்ந்த ஒருவரின் பெயரைக் கூறுக என்றார்;**

**உயிரோடிருப்பவர் மட்டுமல்ல; என் உயிரோடும் மூச்சோடும்**
**கலந்துள்ள**
**ஒரு தலைவர் உண்டு; அவர் தான் பிடல் காஸ்ட்ரோ என்றேன்.**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## இன்னும் பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்திட நடவடிக்கை!

# முதலீட்டாளர்களின் முதல் தேர்வு, தமிழ்நாடு!

## பெரம்பலூர் - எறையூரில் காலணி உற்பத்தி தொழிற்சாலையைத் தொடங்கிவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ.30-**

**“முதலீட்டாளர்களின் முதல் தேர்வாக, தமிழ்நாடு இருப்பதால் பன்னாட்டு நிறுவனங்களை மேலும் ஈர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர் மாவட்டம் எறையூரிலுள்ள சிப்காட் தொழில் பூங்காவில் ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவின் உற்பத்தியை காணொலி மூலம் தொடங்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2023) பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தி தொழிற்சாலையை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சிறப்பாக நடைபெறும், JR ஒன் ஃபுட்வேர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்தித் திட்டத்தின் துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!

கடந்த ஆண்டு நவம்பர் மாதம்தான், பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் அமைக்கப்பட்டிருக்கின்ற சிப்காட் தொழில் பூங்காவைத் திறந்து வைத்து, ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணி பூங்காவுக்கும் அடிக்கல் நாட்டினேன். சரியாக ஓராண்டு காலத்தில் துவக்க விழாவில் பேசுவதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி!

### முதலீட்டாளர்களின் முதல் தேர்வு, தமிழ்நாடு!

மாநிலத்தில் முதலீடுகளுக்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதுதான் இதற்கு முக்கியமான காரணம்.

இங்கே பிசினஸ் செய்வது எவ்வளவு எளிதாக இருக்கிறது என்பதும், முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு எப்படித் திகழ்கின்றது என்பதற்கும் இது கண்கூடான சாட்சி!

வளர்ச்சித் திட்டங்கள் என்பது, வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

தோல் மற்றும் காலணித் துறைகளை பொறுத்தவரைக்கும், இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது உங்களுக்கே அது நன்றாக தெரியும்!

கடந்த ஆண்டு, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022ஐ நான் வெளியிட்டேன். இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு, இந்தத் துறையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது நமக்கெல்லாம் கண்கூடாகவே தெரிகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2023) பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தித் தொழிற்சாலையை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30-11-2023

# நன்றியின் அடையாளம் இந்தச் சிலை!

அரச குடும்பத்தில் பிறந்த புத்தர், அடித்தட்டு மக்களைப் பற்றிச் சிந்தித்ததைப் போல இராஜ பரம்பரையில் பிறந்த வி.பி.சிங் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஒளிவிளக்காக விளங்கினார். அத்தகைய சமூகநீதியின் ஒளிவிளக்காம் வி.பி.சிங் அவர்களுக்கு சென்னை கடற்கரை சாலையில் மாநிலக் கல்லூரி வளாகத்தில் கம்பீரச் சிலை வைத்து அழியாப் புகழை அடைந்து விட்டார் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்தியாவின் சமூக நீதிக் காவலராம் வி.பி.சிங் அவர்கள் பிறந்தது உத்தரப் பிரதேச மாநிலம். **‘எங்களது சொந்த மாநிலமான உ.பி.யில் கூட எங்களது தாத்தாவுக்குச் சிலை வைக்கப்படவில்லை. தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக அமைகிறது’** என்று வி.பி.சிங் அவர்களின் பேத்தி சொல்லி இருக்கிறார். இதற்கு இணையத் தளத்தில் ‘உதயமாறன்’ என்பவர் பதில் சொல்லி இருக்கிறார்.

**“மராட்டியத்தில் பிறந்த அண்ணல் அம்பேத்கர் பெயரைக் கூட அந்த மண்ணில் ஒரு கல்லூரிக்குச் சூட்ட முடியாதிருந்த காலத்தில்தான் கலைஞர் அவர்கள் இங்கே சட்டப் பல்கலைக் கழகத்துக்கு அண்ணல் அம்பேத்கர் பெயரைச் சூட்டினார்”** என்று எழுதி இருக்கிறார். இதுதான் சமூகநீதி மண் என்பதற்கான அடையாளம் ஆகும். இந்த மண்ணில்தான் அம்பேத்கர் பெயரையும் துணிச்சலாக வைக்க முடியும். வி.பி.சிங்குக்கும் சிலை அமைக்க முடியும்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களிடம், **‘தமிழ்நாட்டில் வி.பி.சிங் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நினைவுச் சின்னம் வேண்டும்’** என்று கோரிக்கை வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டார்கள். ஆட்சி மாற்றம் காரணமாக அது நிறைவேறவில்லை. தமிழினத் தலைவர் கலைஞர் விட்ட இடத்தில் இருந்து பணிகளைத் தொடங்கி நடத்தி வரும் இரண்டாம் கலைஞராம் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதனை மறக்காமல் நிறைவேற்றிக் காட்டிவிட்டார்கள்.

**‘இந்த சிலை வைப்பதன் மூலமாக அவருக்கு நாம் காட்ட வேண்டிய நன்றியைக் காட்டுகிறோம்’** என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன சொல்லே கல்வெட்டுச் சொல்லாகும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான சமூக நீதி இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவது முக்கியமா? பிரதமர் பதவி முக்கியமா? என்ற இரண்டில் சமூகநீதியைக் கையில் எடுத்தவர் வி.பி.சிங். அந்த கம்பீரத்துக்கு நன்றி தெரிவிக்கவே இந்த சிலை!

**‘என் ஆட்சி கவிழ்க்கப்படும்’ என்று எனக்கு நன்றாகவே தெரியும் என்றாலும், சமூகநீதியில் யார் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்பதை நாடு தெரிந்து கொள்ளவே இதனைச் செய்கிறேன்’** என்றவருக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது!

மதவாதமா? மத நல்லிணக்கமா? எது முக்கியம் என்ற போது மத நல்லிணக்கத்தின் பக்கம் நின்ற பன்முகத் தன்மைக்கு நன்றி தெரிவிக்கவே இந்தச் சிலை!

**“பெரியார் இறந்த பிறகும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அவருக்குப் பின்னாலே இருக்கின்ற மக்களின், வருகின்ற சந்ததியினரின் உள்ளங்களிலே, அவரது கருத்துகள் நிறைந்திருக்கின்றன என்றால், அவர் சாகவில்லை என்பதைக் காட்டுகிறது”** என்று சொன்னாரே வி.பி.சிங். அதற்கு நன்றி காட்டவே இந்த சிலை!

**“ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது, ‘அவமானம்’ என்றே நான் சொல்லுவேன். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான மக்கள் சமூக அநீதியால், அவமானத்தால் பாதிக்கப்பட்டார்கள். மனத்தில் அவமானம் என்ற நெருப்புப் பற்றி எரிந்தால், இந்த நாட்டில் புரட்சிதான் வெடித்துக் கிளம்பும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை உணர்ந்ததால்தான், பெரியார், சுயமரியாதை என்ற முழக்கத்தைத் தந்தார்கள்”** என்று சொன்னாரே வி.பி.சிங். அதற்கு நன்றி காட்டவே இந்த சிலை!

**“இன்றைக்கு இருக்கக் கூடிய சிக்கல்களுக்கு அடித்தளம் என்ன? சமுதாயத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை உயர்த்துவது எப்படி என்பதுதான் அந்தச் சிக்கல். அந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப் பாடுபட்டவர்கள் தான் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களும். பெரியார் அவர்களும்”** என்று சொன்ன மனிதர்க்கு நன்றி காட்டவே இந்தச் சிலை!

**“நாம் 400 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள வரலாற்றுக்குச் செல்வதைவிட, 4000 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள வரலாற்றுக்குச் செல்வோம்”** என்று சிந்திக்கத் தூண்டியவர்க்கே சிலை வைக்கப்பட்டுள்ளது!

**“மண்டல் ஆணைய அமலாக்கம் என்பது, அதிகாரப் பங்கீடு”** என்ற புதுவிளக்கம் கொடுத்தவர் என்பதால் அவருக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது!

**“இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி அண்ணல் அம்பேத்கர் படத்தைக்கூட நாடாளுமன்றத்தில் திறக்க முடியவில்லையே!’ என்று வேதனைப்பட்டதுடன் அண்ணல் அம்பேத்கர் படத்தினைத் திறந்து வைத்தவர் வி.பி.சிங். “பாரத ரத்னா” பட்டத்தையும் அண்ணல் அம்பேத்கருக்கு வழங்கி, பட்டத்திற்குப் பெருமைச் சேர்த்த பெருமகனார் வி.பி. சிங்!**

**“வகுப்புவாதத்துக்கு எதிராக நாம் மதச்சார்பின்மை வேண்டும் என்கிறோம். ஆனால் மதச்சார்பின்மை மட்டுமே வகுப்புவாதத்தை ஒழித்துவிடாது. அத்துடன் கட்டாயமாக சமூக நீதியும் இணைந்தாக வேண்டும்”** என்ற புதிய அரசியல் நெறியை உருவாக்கிக் கொடுத்தவருக்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

**“சமூகநீதிக்காக ஒரு முறையல்ல, ஆயிரம் முறை பிரதமர் பதவியை இழக்கத் தயார். ஒரு நல்ல பொருளை வாங்க வேண்டுமா, அதற்கு நல்ல விலையைத் தந்தாக வேண்டும். நான் நல்ல பொருளை வாங்குவதற்காக நல்ல பொருளைத் தந்திருக்கிறேன்”** என்று சொன்னவருக்குச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை தியாகராயர் நகரில் ஒரு கூட்டம். வி.பி.சிங் பேசிக் கொண்டு இருந்தார். திடீரென கூட்டத்தைப் பார்த்து, **“யாராவது உங்கள் முகத்தில் எச்சில் துப்பினால் என்ன செய்வீர்கள்?”** என்று கேட்டார். கூட்டம் அமைதியாக இருந்தது. ‘சொல்லுங்கள்’ என்று மறுபடியும் கேட்டார். ஒருவர் எழுந்து, ‘துப்பியவன் முகத்தில் ஒரு அடி கொடுப்பேன்’ என்றார். ‘இதுதான் சுயமரியாதை’ என்று சொன்னார் வி.பி.சிங். அவருக்குத்தான் சிலை வைக்கப்பட்டுள்ளது!

டெல்லியில் பெரியார் மய்யம் இடிக்கப்பட்டது. அப்போது மருத்துவமனையில் இருந்தார் வி.பி.சிங். பின்னர் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் உரையாற்றும் போது, **“நான் அப்போது அந்த இடத்தில் இருந்திருந்தால் புல்டோசர் முன்னால் ஏறி நின்று தடுத்திருப்பேன்”** என்றவர் வி.பி.சிங். அவருக்குத் தான் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

**“காலம் மாறினாலும் தான் மட்டும் மாறாமல் இருக்கிற ஒரு தலைவர் உண்டென்றால் அது கலைஞர் அவர்கள்தான். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள என்னுடைய கட்சி முதலமைச்சர்களே என்னை விட்டு ஓடிய நேரத்தில் என்னோடு இருந்தவர் கலைஞர் அவர்கள்”** என்று சொல்லி பாராட்டியவர் வி.பி.சிங் அவர்கள்.

**“வி.பி.சிங்கை யார் மறந்தாலும் தமிழ்நாடு மறக்காது”** என்று சொல்லி நன்றியின் உருவமாகச் சிலை திறந்த மாண்புமிகு முதலமைச்சர்க்கு தமிழ்ப்பெருங்குடி மக்களின் கோடானுகோடி நன்றிகள்.

மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிவு!

# தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே - அமலாக்கத்துறையை ஒன்றிய அரசு ஏவுகிறது!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி – கடும் கண்டனம்!

**புதுடெல்லி, நவ.30-**

**மூத்த வழக்கறிஞரும் – நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினருமான என்.ஆர்.இளங்கோ, நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், “மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிகிறது!” என்றும், “தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே - அமலாக்கத் துறையை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏவுகிறது” என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அளித்த பேட்டி வருமாறு :-

அமலாக்கத் துறை சட்டவிரோத பண பரிமாற்றச் சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்க வேண்டும் என்றால், அதற்கு அடிப்படையான ஒரு வழக்கு உரிய காவல்துறையால் பதியப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். அமலாக்கத்துறை 4 முதல் தகவல் அறிக்கையை வைத்துக்கொண்டு இந்த வழக்கை விசாரிக்கப் போவதாக சொல்லியுள்ளார்கள். அந்த 4 வழக்குகளும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மணல் குவாரிகளுக்குச் சம்பந்தம் இல்லாதவை. தனியார் மணல் கொள்ளைக்காரர்களால் நடத்தப்பட்ட குவாரிகளில் போலியாக ஆதாரங்களை வைத்துக்கொண்டு அமலாக்கத் துறை இந்த வழக்கைப் பதிவுசெய்து தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் விசாரித்து வருகின்றனர்.

அமலாக்கத்துறை தன்னுடைய பதிலில், ‘நாங்கள் எவ்வளவு மணல் கொள்ளை நடந்துள்ளது என்பதைச் சேகரித்துள்ளோம்’ என பொய்யான தகவல்களை உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார்கள். ஆனால் மணல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இல்லை என்பதை உயர்நீதிமன்றம் சொல்லியுள்ளது.

மணல் விவகாரத்தில் கொள்ளை போயிருப்பதாக அமலாக்கத்துறைக்குத் தகவல் கிடைத்தாலும், சட்டவிரோத பணபரிமாற்றச் சட்டம் 66இன்கீழ் அரசிற்கும், அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்கும் தகவல் தந்துதான் விசாரிக்கச் சொல்லியிருக்க வேண்டும், அமலாக்கத் துறையினரே அந்த விசாரனையை நடத்தக் கூடாது.

அதேபோல் மாநில புலன் விசாரனை அமைப்புகளால் மணல் உட்பட ஏதேனும் விவகாரங்களில் குற்றம் நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டால் மட்டும் தான், அந்த விவகாரத்தில் சட்டவிரோதமாகப் பணம் கைமாறப்பட்டுள்ளதா என்ற வகையில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த முடியும். தங்களுக்கு அதிகாரம் இல்லாத, மணல் கொள்ளை நடந்ததா இல்லையா என்ற விசாரணையை அமலாக்கத் துறைச் சட்டத்திற்குப் புறம்பாக நடத்தக் கூடாது என்றுதான் வாதம் செய்தோம். அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டப்படி அமலாக்கத் துறை இந்த விசாரணையைச் செய்ய முடியாது. ஒருவேளை மணல் விவகாரத்தில் முறைகேடு நடைபெற்றதாக அமலாக்கத் துறைக்குத் தெரிய வந்திருந்தால், அந்த தகவலைத் தமிழ்நாடு அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தினால், அந்தப் புலன் விசாரணை அமைப்புகள் மட்டுமே விசாரிக்க முடியும். அப்படி புலன் விசாரணை அமைப்புகள் விசாரணை மேற்கொண்டு தவறு நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுத்தால், அதனடிப்படையில் சட்டவிரோதமாகப் பணப் பரிமாற்றம் நடந்துள்ளதா என்ற விசாரணையை மட்டும்தான் அமலாக்கத் துறைச் செய்ய முடியும்.

### பா.ஜ.க.வின் கையாளான அமலாக்கத்துறை!

அரசு அதிகாரிகளை அழைக்கும்போது பிரிவு 50 (2)இன் கீழ் சம்மன் கொடுக்க அதிகாரம் கிடையாது. அது முறையற்ற புலன் விசாரனை. சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் அமலாக்கத் துறையினர் மாநில அரசின் அதிகாரிகளை விசாரிக்க வேண்டும் என்றால் பிரிவு 54இன்கீழ் மட்டும்தான் சம்மன் கொடுத்து விசாரிக்க வேண்டும். ஒன்றிய அரசு எங்குப் புலன் விசாரணை செய்ய வேண்டுமோ, அங்கு மட்டும் தான் செய்ய வேண்டும். மாநில அரசின் அதிகாரங்களைக் கையில் எடுப்பது மாநில சுயாட்சிக்கு எதிரானது என்ற வாதத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த வழக்கை பா.ஜ.க.வின் கையாளாகச் செயல்படும் அமலாக்கத் துறை தமிழ்நாடு அரசின் மீது களங்கம் விளைவிக்க மட்டுமே போட்டுள்ளார்கள் என்பது அவர்கள் தந்துள்ள பதில் மனுவிலே குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டது. அப்போது தேர்தல் பரப்புரையில் அமித்ஷா, அ.தி.மு.க. ஆட்சியில் ஏறக்குறைய 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மணல் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் பா.ஜ.க.வினர், அ.தி.மு.க. மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மணல் கொள்ளை குறித்த வழக்குகள் நடைபெற்று கொண்டுள்ளன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் எவ்வளவு மணல் கொள்ளை வழக்குகள் உள்ளன என்ற பட்டியலையும் நீதிமன்றத்திலும் சமர்பித்துள்ளோம். அங்கு அமலாக்கத்துறையினர் எந்தப் புலன் விசாரனைகளையும் மேற்கொள்ளவில்லை.

2024 தேர்தலை எதிர்நோக்கி உள்ள நேரத்தில், தி.மு.க. அரசிற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் 4730 கோடி ரூபாய் அரசிற்கு வந்திருக்க வேண்டியது வரவில்லை என பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். 201112ஆம் ஆண்டில் 31 லட்சம் லோடுகள் மணல் விற்பனை அரசால் நடந்துள்ளது. 2020-21இல் 1.5 லட்சம் லோடுகள் மட்டும் தான் விற்பனை செய்ய முடிந்தது. ஆற்று மணலுக்கு பதிலாக இசேண்ட் மணல் விற்பனைக்கு வந்ததால் மக்களிடம் ஆற்று மணல் வாங்கும் ஆர்வம் குறைந்து விட்டது. 2021-22ஆம் ஆண்டில் அது 80 ஆயிரம் லோடுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படை ஆய்வுகூட இல்லாமல் 27.75 லட்சம் லோடுகள் விற்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தவறான கணக்கை பதில் மனுவில் தாக்கல் செய்துள்ளனர். விளக்கம் கேட்ட நோட்டீசில், தமிழ்நாடு அரசு மணல் கொள்ளையைத் தடுக்க சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டும்தான் காரணம் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

பா.ஜ.க.வின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளதாலும், மக்கள் அவர்கள் மீது கோபமாக இருப்பதாலும் மிகப்பெரிய பின்னடைவு வரக்கூடிய தேர்தலில் அவர்களுக்கு ஏற்படும்.

பா.ஜ.க.வினர் யாரையாவது திட்டுகிறார்கள் என்றால், அவர்கள் நல்லவர்கள் என்று மக்கள் புரிந்துகொள்வார்கள். பொய்யர்கள் கூறுவதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி விரிசல் என்பதும் போலியான நாடகம் என்பதை பலமுறை தி.மு.க.வின் மூத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

### துண்புறுத்தல்!

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மீது மட்டும்தான் பா.ஜ.க.வினர் வழக்குப் போட்டுள்ளனர். அரசு அதிகாரிகளை மிரட்டி ஒரு வாக்குமூலம் வாங்கினால் அதை வைத்து வழக்கு போட முடியாதா என்றும் அமலாக்கத்துறையினர் பார்க்கின்றனர். முத்தையா என்ற அதிகாரி கூறும் போது கூட, தன்னைத் துன்புறுத்தி அமலாக்கத்துறையினர் வாக்குமூலம் வாங்கியதாக பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளதோடு காவல்துறையில் புகாரே கொடுத்துள்ளார்.

இந்த வழக்கை முழு விசாரணைக்கு வரும் 21ஆம் தேதி எடுத்துக்கொள்வதாக நீதிமன்றம் கூறியுள்ளது. அப்போது அரசு குவாரிகளில் எந்தவிதமான மணல் கொள்ளையும், முறைகேடுகளும் நடக்கவில்லை என்பதை உரிய ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் சிறையில் இருக்கும் ஒருவர், ஜாமீன் வேண்டும் என்றால், எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபிக்கும் வகையில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதேநேரம் அவரின் உடல்நிலை பாதிப்படைந்திருந்தால் இந்த விதி தளர்த்தப்படும். அதனால் தான் மருத்துவக் காரணங்களுக்காக ஜாமீன் கேட்டோம். அது நீதிமன்றத்திற்குத் திருப்தியாக இல்லை என்பதால், கீழ் நீதிமன்றத்திற்குச் சென்று முறையிடச் சொல்லியுள்ளார்கள். ஜாமீன் வழங்குவதற்காக முகாந்திரம் இல்லை என நீதிமன்றம் கருதியிருந்தால் டிஸ்மிஸ் செய்திருக்கலாம், ஆனல் அப்படிச் செய்யாமல், ஜாமீன் வழங்க முகாந்திரம் இருப்பதால், கீழ் நீதிமன்றம் சென்று மெரிட்ஸ் படி கேட்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

செந்தில்பாலாஜி தொடர்புடைய வழக்கும் பொய்யான ஆதாரங்களின் அடிப்படையில்தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அதை மெரிட்ஸ்படி ஜாமீன் கேட்கும் போது தாக்கல் செய்வோம்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. தனது பேட்டியில் குறிப்பிட்டார்.



# பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகளை ஈர்க்க முயற்சி!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இதுமாதிரியான வளர்ச்சியை பார்க்கும்போது, 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற நம்முடைய இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது!

இந்தத் துறையில், நம்முடைய தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தவேண்டும், இன்னும் பல பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்திடவேண்டும் என்ற உந்துதல் காரணமாக, நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில், 400 கோடி ரூபாய் செலவில் 250 ஏக்கர் பரப்பளவில் காலணி உற்பத்திப் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சிப்காட் / சிட்கோ மற்றும் பொது தனியார் கூட்டாண்மை மூலம், 3050 ஏக்கர் பரப்பளவில் தொழில் பூங்காக்கள் வடிவில் ஆயத்த தொழில்கூடங்களுடன் புதிய தோல் அல்லாத காலணி உற்பத்திக்கான பசுமைத் தொகுப்புகளை அரசு உருவாக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன்.

தற்போது பெரம்பலூர் மாவட்டத்தில், இவ்வளவு சிறப்பான திட்டத்திற்கான திறப்பு விழா நடைபெறுகிறது. "பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி. சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி" என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு!

**இதுமாதிரியான வளர்ச்சியை பார்க்கும் போது, 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற நம்முடைய இலக்கை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது!**

பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகளை ஈர்த்திட அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு பலன் அளிக்கின்ற வகையில், இந்தத் திட்டத்திற்கான திறப்பு விழா இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக, பெரம்பலூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இன்றைக்கு, முதற்கட்டமாக, 400 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில், கோத்தாரி குழுமத்தைச் சார்ந்த JR One கோத்தாரி காலணி உற்பத்தித் தொழிற்சாலை துவக்கி வைக்கப்படுகிறது. 2028ஆம் ஆண்டுக்குள், கோத்தாரி ஃபீனிக்ஸ் நிறுவனம், மேலும் 2,440 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 29 ஆயிரத்து 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்று விரிவாக்கம் செய்யவும் திட்டமிட்டிருக்கிறது.

இவை எல்லாம் முதலீட்டாளர்களிடம் நம்பிக்கையை விதைத்திருக்கிறது. இதற்கெல்லாம் மணிமகுடமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை, வருகிற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கிறோம். உங்களைப் போன்ற நிறுவனங்களோடு சேர்ந்துதான் இந்த மாநாட்டை நடத்த இருக்கிறோம்.

உலகம் முழுக்க இருந்து பல் வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கிறார்கள்.

அதற்கு முன்பாகவே, ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம், இந்த அதிநவீன உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது மிக மகிழ்ச்சி அளிக்கிறது.

சொல்லப்போனால், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு முன்னதாகவே, பல நிறுவனங்களோடு துவக்க விழாவை நான் சமீபத்தில் மேற்கொண்டிருக்கிறேன்.

**தமிழ்நாட்டை நோக்கி உலக நிறுவனங்கள்!**

உங்கள் தொழில் முயற்சி வெற்றி பெறவும், உங்களுடைய திட்டங்கள் மென்மேலும் வளர்ச்சி பெற்றிடவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்!

இந்தத் தொழில் மேலும் சிறப்படைய அனைத்து உதவிகளையும் இந்த அரசு உறுதியாக செய்யும் என்று உறுதி அளித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!




## ரூ.400 கோடி முதலீட்டில் 4000 பேருக்கு வேலை வாய்ப்பு!

# பெரம்பலூரில் கோத்தாரி காலணி பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 30 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2023) பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தித் தொழிற்சாலையை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.**

இத்தொழிற்சாலையை அமைக்க 28.11.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அதன் பின்னர், மிகச் சரியாக ஓர் ஆண்டு காலத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**முன்னணி மாநிலம்!**

இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இப்பெருமை நிலைபெறவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திடவும், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

காலணிகளைப் பொறுத்தவரை, உலக அளவில் தோல் அல்லாத காலணிகளின் நுகர்வும், விளையாட்டு வீரர்களின் காலணிகளுக்கான நுகர்வும் அதிக அளவில் உள்ளன. மேலும், இத்துறையில் அதிக வளர்ச்சிக்கான வாய்ப்புகளும், ஏற்றுமதிக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகளும் உள்ளன. இவை மட்டுமின்றி, அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் துறையாகவும் இத்துறை திகழ்கிறது.

இத்துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதில் பெரும் அளவில் முதலீடுகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், 23.8.2022 அன்று "தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை2022" முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

**பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு!**

"அனைவரையும் உள்ளடக்கிய பரவலான மற்றும் நிலையான வளர்ச்சி" என்பதை நோக்கமாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள எறையூர் சிப்காட் நிறுவனம் மூலமாக ஒரு தொழிற் பூங்காவை அமைத்துள்ளது. இப்பூங்காவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளதன் மூலமாக, பெரம்பலூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உருவாகும். இதனால் இப்பகுதி மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிப்பதுடன் பொருளாதாரமும் மேம்படும். இந்நிறுவனம், 2028ஆம் ஆண்டிற்குள் 2,440 கோடி ரூபாய் முதலீட்டில் 29,500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் விரிவாக்கம் செய்திடவும் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்விழாவில், பெரம்பலூர் மாவட்டம், எறையூரிலிருந்து போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே. விஷ்ணு, சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் கி.செந்தில் ராஜ், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. க.கற்பகம், ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்தின் தலைவர் ஜின்னா ரஃபீக் அஹமத், ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஜாங் ராங் வு, JR One இயக்குநர் ஜாங், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அண்ணா பல்கலைக்கழகம் ஜெர்மன் பல்கலைக்கிடையே

## தொழில் நுட்ப படிப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

### அமைச்சர் க.பொன்முடி முன்னிலையில் கையெழுத்தானது!

*சென்னை, நவ.30*

சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் ஜெர்மன் பல்கலைக்கழகம் இடையே தொழில் நுட்ப படிப்புகளுக்கான ஒப்பந்தம் அமைச்சர் க. பொன்முடி முன்னிலையில் நேற்று முன்தினம் கையெழுத்தானது.



தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் நோக்கில், ஜெர்மன் நாட்டின் கல்வி நிறுவனங்களுடன் தமிழ் நாட்டின் பல்கலைக் கழகங்கள் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி முன்னிலையில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் ஜெர்மன் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இடையே தொழில் நுட்ப படிப்புகளுக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் க.பொன்முடி,

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாடு வளர்ச்சி அடைய நான் முதல்வன் திட்டம் மூலம், ஜெர்மன் நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்துடன் தமிழ் நாட்டின் பல்கலைக்கழகம் இணைந்து ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் செல்வகணபதி மீதான தண்டனை ரத்து!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு !

*சென்னை, நவ. 30 -*

சி.பி.ஐ. தொடர்ந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செல்வகணபதிக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனையை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுடுகாடுகளுக்கு கூரை அமைத்த விவகாரத்தில் முன்னாள் அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வ கணபதிக்கு எதிராக சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கில் செல்வகணபதி உட்பட 5 பேருக்கு கடந்த 2014ஆம் ஆண்டு சி.பி.ஐ. நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.



இந்தத் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதனை விசாரித்த உயர்நீதிமன்றம், செல்வ கணபதிக்கு விதிக்கப் பட்ட 2 ஆண்டு சிறை தண்டனையை ரத்து செய்து நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

### 'தில்லானா மோகனாம்பாள்' புகழ்-கலைமாமணி

## மதுரை நாதஸ்வர வித்வான் எம்.பி.என். பொன்னுசாமி மறைவு!

### இசைக் கலைஞர்கள் புகழ் அஞ்சலி!

*மதுரை, நவ.30-*

தில்லானா மோகனாம்பாள் திரைப்பட புகழ் இசைப் பேரறிஞர் - கலைமாமணி பட்டம் பெற்ற மதுரை நாதஸ்வர வித்வான் எம்.பி.என். பொன்னுச்சாமி (வயது 90) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

நடிகர் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்த தில்லானா மோகனாம்பாள் படத்தில் ஒலித்த நாதஸ்வர இசையை தனது சகோதரர் எம்.பி.என்.சேதுராமனுடன் இணைந்து இசைத்தவர். எம்.பி.என்.சேதுராமன் ஏற்கனவே இயற்கை எய்திவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களது குழுவில் தேவூர் சந்தானம் மற்றும் திருவிடைமருதூர் வெங்கடேசன் ஆகியோர் தவில் வாசித்துள்ளனர்.

காரைக்குடியில் சகோதரர்கள் சேதுராமன் மற்றும் பொன்னுசாமி இணைந்து திருமண நிகழ்வில் நாதஸ்வரம் வாசித்தபோது 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் பணியாற்றும் வாய்ப்பை இயக்குநர் ஏ.பி. நாகராஜன் மூலம் பெற்றுள்ளனர்.

இந்தப் படம் வெளியான பிறகு பிரபலங்கள் பலர் பங்கேற்ற விழாக்களில் நாதஸ்வரம் இசைக்கும் பணியை பொன்னுசாமி பெற்றுள்ளார். தலைமுறை தலைமுறையாக இவரது குடும்பத்தினர் நாதஸ்வரம் வாசித்து வந்துள்ளனர். 1977ல் தமிழ்நாடு அரசு இவருக்கு கலைமாமணி விருதை வழங்கியது. 1997-ல் கிருஷ்ண கான சபாவின் சங்கீதா சூடாமணி விருதையும் பெற்றுள்ளார்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து அவரது உடலுக்கு இசைக் கலைஞர்கள் அஞ்சலி செலுத்தினர்.

### நாதஸ்வர கலைஞர் எம்.பி.என். பொன்னுசாமி மறைவு!

## இசை உலகிற்கே பேரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, நவ.30-

நாதஸ்வர கலைஞர் எம்.பி.என். பொன்னுசாமி நேற்று முன்தினம் இயற்கை எய்திய தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார். அதில் 'நாதஸ்வர கலைஞர் பொன்னுசாமி அவர்களின் மறைவு இசை உலகிற்கே பேரிழப்பு' என்று குறிப்பிட்டுள்ளார்.



இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**நாதஸ்வர கலைஞர் எம்.பி.என். பொன்னுசாமி அவர்கள் நேற்று காலை இயற்கை எய்திய தகவலறிந்து வருத்தமடைந்தேன்.**

**தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும், மும்பை, டெல்லி போன்ற பிற மாநிலங்களிலும் தமது சகோதரர் மறைந்த எம்.பி.என். சேதுராமனுடன் தமது நாதஸ்வர இசையின் மூலம் எண்ணற்றவர்களை மகிழ்வித்தவர். அவரது மறைவு இசை உலகிற்கே பேரிழப்பாகும். அவரது மறைவால் துயருறும் இசைக் கலைஞர்களுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (7)

# இளைஞர்கள் - புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இளம் பிராயத்திலேயே அவர் எழுச்சி முரசு! புரட்சிக் கனல்!
இனங்கண்டு எதிரிகளை வீழ்த்திக் காட்டும் மூளைக்குச் சொந்தக்காரர்!
இருளில் சர்வாதிகாரியாகவும், வெளிச்சத்தில் ஜனநாயக வாதியாகவும்
இரட்டை வேட அரசியல் நடத்திய
'பாடிஸ்டா' எனும் பசுத்தோல் வேங்கை!
அந்த விலங்கின் வேஷத்தைக் கலைக்கத் துணிந்து, அதற்கோர்
அணியைத் தயாரித்துப் போரிட்டுத் தோல்வியுற்று, சிறைப்பட்டு,
நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்ட போது தான்
"வரலாறு என்னை விடுதலை செய்யும்" எனும்
வைர வரிகளைச் சரித்திரப் புத்தகத்தில்
வையம் புகழ் சித்திரமாகப் பதிய வைத்தார், காஸ்ட்ரோ!
பாடிஸ்டா ஆட்சியில் பிடலுக்கு பதினைந்தாண்டு சிறை என்றதும் -
பற்றி யெரிந்த மக்களின் புரட்சி நெருப்புக்கு,
ஈடு கொடுக்க முடியாமல் இரண்டே ஆண்டுகளில்
சிறைக் கதவு திறந்தது, சிங்கம் வெளியே வந்தது - அந்த
சிங்கத்துக்கோர் சிறுத்தை துணை சேர்ந்தது
அதன் பெயர்தான் சேகுவேரா!
தங்கத் தம்பியாம் ரால் காஸ்ட்ரோவையும்,
தம்பி போன்ற சேகுவேராவையும்,
அங்கம் வகிக்கச் செய்து ஆர்த்தெழுந்து போரிட்டு முன்னேறவே,
பங்கமுற்ற பாடிஸ்டா பயந்து நடுங்கி இனி
கியூபா மக்களிடம் தன் சேட்டைகள் செல்லாதென்று
நீயும் வா என்று ஆணவத்தையும் அழைத்துக் கொண்டு,
நாட்டை விட்டே ஓடி விட்டான்! நல்லாட்சி மலர வழி விட்டு!
கேட்டைக் களைந்தெறிந்த காஸ்ட்ரோ, தலைமை வழி காட்டியானார்!
கடமையும் பொறுப்பும் வந்தவுடன்
கடந்த காலத்தை மறந்து விடாமல்,
சோதனைகளை சந்தித்து மறைந்த
ஜோஷ் மார்ட்டியின் தலைமைக்கும்,
சாதனைகள் புரிந்து மறைந்த
சிபாசின் வழிகாட்டுதலுக்கும்,
மதிப்பும் மரியாதையும் அளித்திட
மறக்காத மாவீரர் தான் பிடல் காஸ்ட்ரோ!
'கியூபா' சின்னஞ் சிறிய நாடு!
ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட அழகிய தேன் கூடு!
தேன் கூடென்று ஏன் சொல்கிறேன் தெரியுமா?
தெரியாமல் அமெரிக்கா கை வைக்கும் போதெல்லாம்
கொட்டி விடும் தேனீக்கள் கியூபாவின் மக்கள் - அந்தக்
கூடு காக்கும் காவல்காரர் தான் பிடல் காஸ்ட்ரோ!
நல்வாழ்வுச் சட்டங்கள் பலவும் - மக்கள்
நலம் பெருக்கும் சாதனைகள் பலவும்
இல்வாழ்வையும் துறந்து
இலட்சியத்துக்காக வாழ்ந்திடும் காஸ்ட்ரோவின்
புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகளாய்
புதிய புதிய பக்கங்களாய்ப் புரண்டு கொண்டேயிருக்கின்றன.
உலகின் சர்க்கரைக் கிண்ணம் எனப் பேசுமளவுக்குக்
கரும்பு வயல்களைக் கொண்ட கியூபாவில்
சர்க்கரை வாங்குவதையே நிறுத்தி, பொருளாதாரச்
சரிவு ஏற்படுத்த அமெரிக்கா ஆயத்தமானபோது;
சீனாவும், சோவியத்தும் தான் சிநேக நாடுகளாய்க்
காஸ்ட்ரோவுக்கு கை கொடுத்த கதை உலகறியும்!
"வாழை, தென்னை மரங்களை வலிமைமிகு துதிக்கையால்
யானை முறித்துப் போட்டு விடும்
அந்த யானை போன்றதே அமெரிக்கா" என்றனர்.

அதற்கு காஸ்ட்ரோ அஞ்சி நடுங்கவில்லை.
வாழை மரம், தென்னை மரங்களை, யானை,
வாயிலே போட்டுக் கொள்ளலாம் எளிதாக!
ஆனால், அங்குசத்தை யானை விழுங்க முடியுமா?
அங்குசந்தான் கியூபா! அமெரிக்க யானைக்கு!
வெள்ளி விழா ஐ.நா. சபைக்கு நடந்த போது - பல
நாடுகளின் தலைவர்களுக்கு மத்தியில்
முப்பத்திரண்டு வயது நிரம்பிய சிவப்பு நட்சத்திரமாக
முதுபெரும் தலைவர்களால் பாராட்டப் பெற்றவர் பிடல் காஸ்ட்ரோ
முதற்கட்டமாக ஸ்பெயின் நாட்டின் காலனி கியூபா -
அடுத்த கட்டம் அமெரிக்காவின் காலுக்கு அணியாக
ஆக வேண்டும் கியூபா என்று ஆதிக்கபுரியினர் முனைந்த போது,
அது தான் முடியாது! அந்தக் காலையே
முடமாக்குவோமென்று -
மக்களைத் திரட்டினார் பிடல் காஸ்ட்ரோ -
மலைப்புற்ற ஏகாதிபத்தியவாதிகள்,
பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடினர் என்றால், அது
பிடல் காஸ்ட்ரோவின் உறுதிக்கும் - அவரைப்
பின்பற்றும் மக்களின் மகத்தான சக்திக்கும்,
பின்பலமாய் மார்க்சின் தத்துவம் இருப்பதற்கும் -
அடையாளம் என்பதை இந்த அவையோரும் அறிவீர்
அடியேனும் அறிவேன் -

இவ்வாறு அந்த மாநாட்டில் என்னால் புகழப்பட்ட பிடல் காஸ்ட்ரோ, அவரது இருபத்தோராவது வயதில், ஹவானா தன்னாட்சிப் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்லூரியில் பயின்று வந்தார். பிடல் 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், உயரம் தாண்டுவதிலும் பிறரைத் தோற்கடித்தவர். எனவே, மாணவர்கள் மத்தியில் கவர்ச்சியுள்ள ஒருவராகவே இருந்தார். ஆனால், நான்கு பேரோடு சேர்ந்து வேலை செய்யும் பக்குவம் பெறாதவராக இருந்ததால், அவர் தனித்தே நடமாடிக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் மாணவர்கள் உட்பட எல்லோரும் அவருடன் நட்பாகப் பழகுவது வழக்கம். பிடல் சட்டக் கல்லூரியில் இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது, ஏராளமான புத்தகங்களை வாங்கிப் படிக்கும் வழக்கமுடையவராக இருந்தார். இந்த பருவத்தில் அவர் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் நூல்களை நிறையப் படித்தார்.

ஆர்த்தோடக்சோ கட்சி அலுவலகத்திற்கு நாள்தோறும் பிடல் போய் வந்தார். இளைஞர்கள் கூட்டம் இவரைச் சுற்றியே வளையமிட்டது. "இந்தத் தேர்தல் நாடகங்கள் மூலம் கியூபாவை என்றைக்கும் விடுவிக்க முடியாது. இப்போதுள்ள அரசியல் சட்டத்தை வைத்துக் கொண்டு, எந்த அடிப்படை மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. புரட்சி ஒன்றுதான் வழி. புரட்சியின் மூலம் அமையும் அரசினால்தான் ஏழைகளை வாழ்விக்க முடியும்" என்று பேசி வந்தார். ஆர்த்தோடக்சோ கட்சியின் முக்கியப் பிரச்சாரகர்களில் இவரும் ஒருவராக ஆனார். பின்னர், ஆர்த்தோடக்சோ கட்சியை விட்டு விலகி, புரட்சிகர இளைஞர் குழுக்களை உருவாக்கினார். சான்டியாகோ நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த, மொன்கடா இராணுவ முகாமை 123 போராளிகளுடன் தாக்குதல் நடத்திய போது பிடல் காஸ்ட்ரோவுக்கு இருபத்தி ஏழு வயதுதான். அந்த தாக்குதல் தோல்வியுற்று மலைகளில் தலைமறைவாக அலைந்தபோது, கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவர் தானே வழக்கில் வாதாடினார். காஸ்ட்ரோவை விசாரிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நீதிமன்றம் ஒரு இராணுவ நீதிமன்றம். இவர் நீதிமன்றத்தில், "நீதிபதி அவர்களே, இப்பொழுது நடைபெறும் அரசு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. இது சட்டவிரோத அரசு. நானும், எனது தோழர்களும் இதனை எதிர்க்கிறோம். பள்ளியில் படிக்கும்போது தாய்நாட்டை நேசிக்கும்படி கற்பிக்கப்பட்டோம். சட்டம் பயிலும்போது சட்டமீறுதலை எதிர்க்க கற்பிக்கப்பட்டோம். இதன்படி சட்ட விரோத அரசை, தூக்கியெறியப் போராடினோம். எங்களுக்கு இராணுவ சர்வாதிகாரியை தூக்கியெறிய வழியில்லாமல் போய்விட்டது. தேர்தல் நடந்திருந்தால் தேர்தல் மூலம் தோற்கடிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும். தேர்தலை ரத்து செய்துவிட்டார். நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். நாட்டையும், மக்களையும் காக்க நாங்கள் போராடுகிறோம்" என்று பிடல் காஸ்ட்ரோ வாதாடியது இன்றைக்கும் புகழ்பெற்று விளங்குகின்றது.

நீதிமன்றத்தில் காஸ்ட்ரோ வெளிப்படுத்திய கருத்துகளால் அவரது புகழ் கியூபா முழுவதும் பரவியது. பலர் விடுதலை பெற்றனர். ஆனாலும், காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினர். சிறை அமைந்த பைன்ஸ் தீவு, கியூபாவின் கடலில் இருந்து 50 மைல் தொலைவில் அமைந்திருந்தது. தன்னையும், தனது தோழர்களையும் தயாரித்துக் கொள்ளும் இடமாக இந்தச் சிறை வாழ்க்கையை பிடல் மாற்றி அமைத்துக் கொண்டார். மக்களிடம் ஏற்பட்ட மாபெரும் எழுச்சியால் பிடல், 1955ஆம் ஆண்டில், அதாவது அவரது இருபத்தொன்பதாவது வயதில் விடுதலை செய்யப்பட்டார்.

பைன்ஸ் தீவுச் சிறையிலிருந்து மீண்ட பிடல் காஸ்ட்ரோ மெக்சிகோ சென்றார். அங்கிருந்தபடியே புரட்சிக்குத் தயார் செய்தார். ஆள் வசதி, பண வசதி எதுவுமின்றி, தன்னம்பிக்கையுடன் இயங்கி கியூபாவிலிருந்தும், பிற பகுதிகளிலிருந்தும் நிதியையும், ஆட்களையும் திரட்டினார். கியூபா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய மூன்று இடங்களில் ஆயுதப் பயிற்சி பெற்ற குழுக்களை உருவாக்கினார். 1956, நவம்பர் 26 இல் கிரான்மா என்ற படகில் 81 பேர் ஆயுதங்களுடன் கியூபா வந்து சேர்ந்தனர். இராணுவ முகாமைத் தாக்கி பாடிஸ்டா இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை விளைவித்தார். பாடிஸ்டா இராணுவத்தினரே பிடலுக்கு ஆதரவாக திரண்டனர். பிடல் காஸ்ட்ரோ தலைமையிலும், அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ, ஆருயிர் நண்பன் சேகுவாரா ஆகியோர் தலைமையிலும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து போரிட்டு சான்டியாகோவைக் கைப்பற்றி ஹவானா நோக்கி முன்னேறினர். 1958, டிசம்பரில் பாடிஸ்டா நாட்டை விட்டு ஓடினார். புரட்சி வெற்றி அடைந்தது. பிடல் தனது முப்பத்தி இரண்டாவது வயதில் பிரதமராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு அந்தச் சின்னஞ்சிறிய நாட்டில், புரட்சிக்காரராக மலர்ந்து மணம் கமழத் தொடங்கினார். அந்த மாவீரன் இன்று வாழ்கிறார் என்றாலும், வாடிக் கொண்டு தான் இருக்கிறார் அவருடைய உடல்நலிவு காரணமாக! நலிவு நீங்கி நாடு மதித்திட, நானிலம் போற்றிட, அவருக்கு வாழ்த்துச் சொல்லி, அவரது உயிருக்குயிராய் இருந்த உத்தமத் தோழர் சேகுவாராவின் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்களை புரட்டிக் காட்டாவிட்டால் கியூபாவின் புரட்சி வரலாறு முழுமையானதாக ஆகாது என்பதால், அந்த உத்தமத் தோழரைப் பற்றியும் ஒருசில வார்த்தைகள் நாளை!

**அன்புள்ள**
**மு.க.**
(முரசொலி - 14.11.2007)

### தமிழக கோயில் பிரசாதங்கள் காஷ்மீரிலும் கிடைக்கும்!

# சிலர் பாராட்ட மனம் இல்லை என்றாலும் - சேற்றை வாரி இறைக்காமல் இருங்கள்!

## "தினகரன்" தலையங்கத்தில் அறிவுரை!

சென்னை, நவ.30-

தினகரன் நாளேடு தலையங்கத்தில் தமிழக அரசு பராமரிக்கும் இந்து சமய அறநிலையத் துறையின் சாதனைகளை கூறி, முதல்வரின் நடவடிக்கை குறித்து பாராட்டியும் அதை தவறாக விமர்சிக்கும் சிலருக்கு அறிவுரையும் வழங்கி உள்ளது.

அது வருமாறு:-

அரசு பொறுப்பேற்ற 30 மாதங்களில் சத்தமில்லாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களுக்கு கும்பாபிஷேகமும், ரூ.5 ஆயிரம் கோடி கோயில் நிலங்களும் மீட்கப்பட்டுள்ளது. பல சிறப்பான புதிய திட்டங்களை தமிழக அரசு அறிவித்து பொதுமக்களின் மனதில் இடம் பிடித்து விட்டதாக ஆன்மிகவாதிகள் பலரும் பாராட்டுகின்றனர். பல ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தாத கோயில்களை தற்போதைய தமிழக அரசு இனம் கண்டு அதனை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருகிறது. ஒரு கோயிலை புனர் நிர்மாணம் செய்வது என்பது மிகச்சிறந்த பணி. அந்தக் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவது என்பது மிகப்பெரிய பணிகளில் ஒன்று.

தமிழக அரசு, தமிழகத்தில் இதுவரை 1,140 கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி உள்ளது. 5 ஆண்டுகளுக்குள் 20 ஆயிரம் கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்த இலக்கு நிர்ணயித்து, அதற்கான தீவிர பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் தமிழ்நாட்டில் திமுக ஆட்சி அமைந்த பிறகு, இந்து சமய அறநிலையத்துறைக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டு ஏராளமான பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்துக்களுக்கு எதிரான அரசு என்ற விமர்சனம் தவிடு பொடியாகும் அளவுக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கோயில்களில் பல்வேறு பணிகள் சத்தமில்லாமல் நடந்து வருகிறது.

இந்து மதத்திற்கு அரசு எதிரி இல்லை, திரிகள் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் காலம் பொற்காலமாக இருக்கும் என பெருமைப்பட அத்துறையின் அமைச்சர் சேகர்பாபு பெருமிதத்துடன் கூறியுள்ளார். 48 முதுநிலை கோயில்களை ஒருங்கிணைத்து சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. மகா சிவராத்திரி திருவிழா, நவராத்திரி கொலு கொண்டாட்டம், ஆடி மாதம் அம்மன் கோயில் சுற்றுலா, புரட்டாசி மாதம் பெருமாள் கோயில்கள் சுற்றுலா, கந்த சஷ்டி முருகன்


தினகரன்
நவம்பர் 28, 2023 செவ்வாய்க்கிழமை
ஆன்மிகவாதிகள் பாராட்டு
தமிழக அரசு பொறுப்பேற்ற 30 மாதங்களில் சத்தமில்லாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களுக்கு கும்பாபிஷேகமும், ₹5 ஆயிரம் கோடி கோயில் நிலங்களும் மீட்கப்பட்டுள்ளது. பல சிறப்பான புதிய திட்டங்களை தமிழக அரசு அறிவித்து பொதுமக்களின் மனதில் இடம் பிடித்து விட்டதாக ஆன்மிகவாதிகள் பலரும் பாராட்டுகின்றனர். பல ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தாத கோயில்களை தற்போதைய தமிழக அரசு இனம் கண்டு அதனை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருகிறது.
ஒரு கோயிலை புனர் நிர்மாணம் செய்வது என்பது மிகச்சிறந்த பணி. அந்தக் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவது என்பது மிகப்பெரிய பணிகளில் ஒன்று. தமிழக அரசு, தமிழகத்தில் இதுவரை 1,140 கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி உள்ளது. 5 ஆண்டுகளுக்குள் 20 ஆயிரம் கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்த இலக்கு நிர்ணயித்து, அதற்கான தீவிர பணிகளை மேற்கொண்டு வருகிறது.
கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் தமிழ்நாட்டில்

கோயில் சுற்றுலா என பல சிறப்பான திட்டங்களை அறிவித்து மக்களின், மனதில் அரசு இடம் பிடித்து விட்டது.

இந்த அரசை ஆதீனங்கள், மடாதிபதிகள் மற்றும் ஆன்மிகவாதிகள் பலரும் பாராட்டி வருகின்றனர். இதனை பொறுக்காத சிலர், இந்து சமய அறநிலையத் துறை மீது திட்டமிட்டு அவதூறு பரப்புகிறார்கள். சமீபத்தில் திருச்செந்தூரில் நடந்த சூரசம்ஹாரம் நிகழ்ச்சியில் 20 லட்சம் பக்தர்கள் பங்கேற்றனர். கார்த்திகை தீப திருவிழாவையொட்டி திருவண்ணாமலையில் 40 லட்சம் பக்தர்கள் திரண்டனர். சிறு அசம்பாவிதமும் இல்லாமல் விழாக்கள் நடந்து முடிந்துள்ளது.

திருக்கோயில் அறப்பணிகள், திருக்கோயிலுக்கு சொந்தமான பல ஆயிரம் கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டது. கோயில்கள் பெயரில் மீண்டும் பட்டா மாறுதல் செய்யும் பணிகளும் தொடர்ந்து முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தமிழக அரசு பொறுப்பேற்ற 30 மாதங்களில் 653 கோயில்களுக்கு சொந்தமான ரூ.5,171 கோடி மதிப்பிலான 5,721.19 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. தமிழக திருக்கோயில்களின் பிரசாதங்கள் காஷ்மீரிலும் பக்தர்கள் வாங்கலாம் என்ற அடிப்படையில் தபால் துறை மூலம் பிரசாதம் வழங்கப்படும் திட்டமும் சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது. புகழ் பெற்ற தலங்களில் விஐபி தரிசனம் ரத்து, ஏழை, பணக்காரன் என இல்லாமல் அனைவருக்கும் சமமான சுவாமி தரிசனம் என ஆன்மீகவாதிகள் பாராட்டும் அரசை, சிலர் பாராட்ட மனம் இல்லையென்றாலும் சேற்றை வாரி இறைக்காமல் இருக்கலாமே.

இவ்வாறு தமிழக இந்து சமய அறநிலையத் துறையை விமர்சிப்பவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!

ஆண் கொசு : டார்லிங் உனக்காக ஒரு சிங்கத்தையே வேட்டையாடி கொண்டு வருவேன் ....

பெண் கொசு : ஒகே ஒகே போய் தூங்கு ...

ஆண் கொசு : கண்ணே ! உனக்காக ஒரு யானையவே அடிச்சு கொண்டு வந்து கொடுப்பேன் ....

பெண் கொசு : சரி .. சரி ... மொதல்ல தூங்க போ டார்லிங்...

ஆண் கொசு : உன்ன நா மெர்சிடஸ் கார்ல உட்கார வெச்சு பாரீஸ் ரோட்ல சுத்தி காண்பிப்பேன் ....

பெண் கொசு : என் மேல உனக்கு எவ்வளவு லவ் னு புரியுது டியர்.... காலையில பேசலாம் போய் தூங்கு ...

ஆண் கொசு : நீ என்ன நம்ப மாட்டியா ..??? நாளைக்கு உனக்கு 100 கிராம்ல தங்க செயின், வைரத்துல நகை போடுவேன் பாரு ...

பெண் கொசு : நா நம்புறே டியர் ... நீ இப்போ தூங்க போ ....

ஆண் கொசு : உலகமே திரும்பி பாக்கற மாதிரி உன் அக்கவுன்ட்ல ரூ.15,00,000 போடுவேன் பாரு ....

இப்போது ஆண் கொசுவை ஓங்கி அறைந்த பெண் கொசு ...

"BJPகாரன கடிச்சுட்டு இங்க வந்து ஒளறாதேனு எத்தன தடவ சொல்லி இருக்குறேன்...!!!???"

1:26 pm



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு நடைபெற்ற கவிதை மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியை மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன், மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பார்.இளங்கோவன், நக்கீரன், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த், பூபதி, நகர் மன்றத் தலைவர் கலாநிதி, மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் மற்றும் புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கட்டிடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, 4 முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இரா.குமரவேல் சிறப்புரை! நாமக்கல் கிழக்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்கானப் போட்டி!

## செ.எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

*நாமக்கல், நவ. 30 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு கவிதை மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நாமக்கல் உழவர் சந்தை எதிரில் உள்ள கவின் கிஷோர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் கே.அய்யாவு வரவேற்றார். துணை அமைப்பாளர்கள் டி. அருள், எஸ்.பூபாலன், சி. ஜெயக்குமார். செ. ஸ்டாலின் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய நிர்வாக குழு உறுப்பினர் வே.பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் விழாவினை துவக்கி வைத்தார்.

கவிதை ஒப்புவித்தல் போட்டியில் 150 பேரும், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியில் 120 பேரும் பங்கேற்றனர். இதில் முதல் பரிசு ராசிபுரம் ஆர் சி ஸ்கூல் பி.நசீபா, இரண்டாம் பரிசு தேங்கல் பாளையம் விக்னேஸ்வரன், மூன்றாம் பரிசு ஒருவந்தூர் அரசு பள்ளி எல் தர்ஷினி,

மற்றும் ஸ்ரீமதி, தரணி, பனிமலர், கிஷோர் குமார், சஜியா ஸ்ரீ, ஸ்ரீ வகனி, பிரியதர் ஷினி, ஸ்மைலி சுபா, தனபிருந்தா தேவி, மதுமிதா ஆகியோர் ஆறுதல் பரிசாக பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு பொருள் வழங்கப்பட்டது.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 5,000/, இரண்டாம் பரிசாக ரூ. 3,000/, மூன்றாம் பரிசாக ரூ. 2,000/ வழங்கப்பட்டது. 10 மாணவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. நடுவர்களாக உழவர் தங்கவேல் புலவர் வளையப்பட்டி சுப்பிரமணியம் புலவர் சங்கரன் கணினி ஆசிரியர் சங்கரன் பங்கேற்றனர்.

தொடர்ந்து மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பார்.இளங்கோவன், இரா.நக்கீரன், நகர் மன்றத் தலைவர் து. கலாந்தி, மாவட்ட நிர்வாகிகள் ந.நலங்கிள்ளி,

நகரக் கழகச் செயலாளர்கள் எஸ்.பூபதி. ராணா ஆர்.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் வி.கே.பழனிவேல், கே.பி.ஜெகநாதன், பெ.நவலடி, பேரூர் கழக செயலாளர்கள் சி.செல்லப்பன் (எ) செல்லவேல்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சசிதரன், வே.சரவணக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சுதா ஜெயக்குமார், ராசிபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் காந்தி,

நாமக்கல் மேற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் வினோத், மோகனூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வேலுபாலாஜி, மாவட்ட பிரதிநிதிகள் உதயபானு, வரதராஜன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வைஸ்பாலு, நகர் மன்ற உறுப்பினர் மூர்த்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் ராஜகோபால் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் இரா.மேகநாதன் நன்றி கூறினார்.

### ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம் சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## தளபதி நகரில் இருளர் மக்களுக்கு கேக் வெட்டி அறுசுவை உணவு வழங்கப்பட்டது!

*கிருஷ்ணகிரி, நவ. 30 -*

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மாண்புமிகு தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது, கோவிந்தாபுரம் ஊராட்சியில் ஒன்றிய குழுத் தலைவர் உஷாராணி குமரேசன் தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது,அதனைத் தொடர்ந்து மூன்றம்பட்டி ஊராட்சி தளபதி நகரில் உள்ள இருளர் மக்களுக்கு கேக் வெட்டி பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட துணை செயலாளர் சந்திரன், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி,ஊராட்சி மன்ற தலைவர் பூபாலன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயச்சந்திர பாண்டியன், நகரவைத் தலைவர் தணிகை குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சத்தியநாராயணமூர்த்தி, மாவட்ட சிறுபான்மை நல. துணை அமைப்பாளர் கலீல், மாவட்ட பிரதிநிதிகள் இதயநாதன், காமராஜ், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ஜெயலட்சுமி ராதாகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் குமார், ஒன்றிய துணை செயலாளர் சைலேந்திரி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அசோக், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வெல்டிங் குமார், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் அன்பு, நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிவகுமார், முன்னாள் ஒன்றிய இளைஞரணி நிர்வாகி ஜாவித், ஒன்று இளைஞர் அணி மோகன், கற்பூர சுந்தர பாண்டியன் கிருஷ்ணமூர்த்தி, சுதாகர், மகேந்திரன், ஆதி, சிவா, அருணகிரி, ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பிரமணி,முருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி ஈரோடு மாநகரம் பெரியசேமூர் பகுதி கழக செயலாளரும் ஈரோடு துணை மேயருமான வி.செல்வராஜ் தலைமையில் கழக கொடியேற்றியும் இனிப்புகள் வழங்கியும், பெரிய வலசு அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகம் எழுது பொருள் மற்றும் பெரிய வலசு அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் குக்கர் சேர்பாய் தலையணை வழங்கினர். நிகழ்வில் இரா.சேகரன், மனோகரன், அன்பழகன், பாலசுப்பிரமணி, செ.க.துரைசாமி, மாமன்ற உறுப்பினர்கள் ஜெகநாதன், வனிதாமணி கலையரசன், எஸ்.பி.வினோத், செல்லமணி, முருகன் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டத்தில்

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமை!

*தருமபுரி, நவ. 30 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞரின் கவிதை,வசனங்கள் ஒப்பிவித்தல் போட்டி இன்று நடைபெறுகிறது என மாவட்ட அமைப்பாளர் தேசிங்குராஜன் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்டக் கழக கலை, இலக்கியப்பகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர், மாணவியர்க்கு தமிழினத்தலைவர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள்þ ஒப்பித்தல் போட்டி இன்று ( 30.11.2023 - வியாழக் கிழமை) காலை 09.00 மணிக்கு மொரப்பூர் இந்து சமய அறநிலையத் துறை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர், முனைவர்.பி.பழனி யப்பன் தலைமையேற்று போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்க உள்ளார்.

அதுசமயம் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட, தொகுதி, ஒன்றிய பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள்,இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### ஈரோடு மாநகராட்சி மண்டல

# மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மண்டலத் தலைவர்கள் ப.க.பழனிசாமி - காட்டு சுப்பு - குறிஞ்சி என்.தண்டபாணி - சசிக்குமார் தலைமை!

*ஈரோடு, நவ. 30 -*

ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. ஆனால் 4 மாநகராட்சியில் உள்ள 4 மண்டலங்களிலும் மண்டல அளவிலான மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடத்தப்படாமல் இருந்தது. இதையடுத்து அந்தந்த மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மண்டல ( வார்டு குழு ) கூட்டங்கள் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ணமூர்த்திக்கு உத்தரவிட்டதையடுத்து 4 மண்டலங்களிலும் மண்டல கூட்டம் நடத்த மாநகராட்சி ஆணையாளர் மண்டல கூட்டங்கள் நடத்த உத்தரவிட்டார். இதனடிப்படையில் ஈரோடு மாநகராட்சி 4 மண்டல அலுவலகத்திலும் கூட்டம் நடைபெற்றது.

ஈரோடு சூரியம்பாளையம் உள்ள மாநகராட்சி 1ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் ப.க.பழனிசாமி தலைமையில் மண்டல கூட்டம் 27.11.2023 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு 1ம் மண்டல உதவி ஆணையர் அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர் தனுஷ் கோடி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 1ம் மண்டலத்தை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று தங்களுடைய வார்டுகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து பேசினார்கள். அதில் பேபிகால்வாயை தூர்வார வேண்டும். பழுதடைந்துள்ள பொதுகழிப்பறையை சீரமைக்க வேண்டும். மழையால் சேதமடைந்துள்ள கான்கிரீட் சாலைகளை புதிதாக அமைக்க வேண்டும். குண்டும் குழியுமான சாலைகளை சீரமைக்க வேண்டும். பாதாள சாக்கடை குழாயில் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதால் தொற்றுநோய் ஏற்படும் பாதிப்புக்கள் உள்ளது. இதனால் அடைப்புகளை நீக்கி பழுதடைந்துள்ள மூடிகளுக்கு பதிலாக புதிய மூடிகள் போட வேண்டும். ஊராட்சிகோட்டை கூட்டு குடிநீர் திட்டத்தில் தற்போது வழங்கப்பட்ட புதிய இணைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் . புதிய தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தெரு விளக்குகளை மறைக்கும் மரக்கிளைகளை வெட்ட வேண்டும். பி.பி. அக்ரஹாரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பின்புறம் உள்ள கழிவு நீர் சாக்கடையை சிலாப் வைத்து மறைக்க வேண்டும். என்பன போன்ற அடிப்படை பிரச்சினைகளை விரைந்து தீர்வு காண வேண்டும் என பேசினர்.

இதற்கு 1ம் மண்டல தலைவர் ப.க.பழனிசாமி பதிலளித்து பேசுகையில் மண்டல கூட்டங்கள் நடத்த அனுமதி அளித்த அரசுக்கும் மாநகராட்சி ஆணையாளருக்கும் இந்த கூட்டம் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். மண்டல கூட்டங்கள் மாதந்தோறும் 20ம் தேதிக்கு முன்னதாக நடத்தப்படும். இந்த கூட்டத்தில் பெறப்படும் கோரிக்கைகள் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் மாமன்ற கூட்டத்தில் மேயர், ஆணையாளர் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதேபோல் மூலப்பாளையத்தில் உள்ள 4ம் மண்டல அலுவலகத்திலும் மண்டல தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமையில் உதவி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் சண்முகவடிவு முன்னிலையில் நடைபெற்றது.

டீச்சர் காலனியில் உள்ள 3ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் சசிகுமார் தலைமையில் உதவி ஆணையர் குணசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது.

பெரியசேமூர் அருகேயுள்ள 2ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் தலைமையில் உதவி ஆணையர் (பொறுப்பு) பாஸ்கர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த மண்டல கூட்டங்களில் அந்தந்த மண்டலங்களை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் வார்டுகளில் உள்ள அடிப்படை பிரச்சினைகளைகள் வார்டில் மேற்கொள்ளபட வேண்டிய வளர்ச்சித் திட்ட பணிகள் மண்டல தலைவரிடம் கோரிக்கை மனுக்களாக வழங்கி பேசினர்.

இதில் அந்தந்த மண்டலத்தை சார்ந்த மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முதல் முறையாக மண்டல கூட்டம் நடைபெறுவதையொட்டி அனைத்து மண்டல அலுவலங்களிலும் மண்டல தலைவர் சார்பில் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்களுக்கு மதிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### ராசிபுரம் புதுச்சத்திரம் ஒன்றியத்தில்

# ரூ.1.18 கோடி மதிப்பில் கூடுதல் புதிய துணை சுகாதார நிலையம்!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

*நாமக்கல், நவ. 30 -*

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் மற்றும் புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.57.64 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி வகுப்பறைகள், நியாய விலைக் கடை, வேளாண் இடுப்பொருள் வைப்பு கிடங்கு மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் உள்ளிட்ட 4 முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்கவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு, ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 கூடுதல் துணை சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு திறந்து வைத்தும், அடிக்கல் நாட்டினார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், மலையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய வகுப்பறைகளை கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி திறந்து வைத்தார். ;அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II ன் கீழ், வேளாண் இடுப்பொருள் வைப்பு கிடங்கு, குருக்கபுரம் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II ன் கீழ், கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை, புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக திட்டத்தின் கீழ், புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் திறந்து வைத்து,

முதலைப்பட்டியில் 15 வது மத்திய நிதி ஆணையம் மற்றும் தேசிய நல வாழ்வு இயக்கத்தின் கீழ், கூடுதல் துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

சேந்தமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் பழங்குடியினர் மாணவியர்கள் 100 பேர் தங்கி பயிலுவதற்கு ஏதுவாக தற்போது அரசு விடுதி கட்டடம் கட்டப்படும் வரை, துத்துக்குளம், ஸ்ரீ அம்மன் தங்கலட்சுமி திருமண மண்டபத்தில் தற்காலிக பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதியினை கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கே.பி.ஜெகநாதன், ஒன்றியச் செயலாளர் அ.அசோக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், இணைபதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் க.பா.அருளரசு, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.க.பூங்கொடி, நாமக்கல் நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன், பழங்குடியினர் நல திட்ட அலுவலர் பீட்டர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திலீபன் ஏற்பாட்டில் சி.சு.ரவிச்சந்திரன் தலைமையில்

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் உணவு!

*திருவள்ளூர், நவ. 30 -*

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் அறிவுறுத்தலில் பெரியகுப்பத்தில் உள்ள அன்னை தெரேசா பள்ளியில் பயிலும் மனவளர்ச்சி குன்றிய மற்றும் காது கேளாத, வாய் பேசாத மாணவ, மாணவிகளுக்கும், திருவள்ளூர், ஆயில்மில் அருகே ஏழை, எளிய மக்களுக்கும் அறுசுவை உணவு இனிப்பு மற்றும் கேக் வழங்கும் விழா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. ஆர்.திலீபன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

## சேலம்: தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநாடு:

# வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கான திருப்புமுனையாக அமையட்டும்!

## கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, நவ. 30 -**

**“வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கான திருப்புமுனையாக சேலத்தில் நடைபெறும் இளைஞரணியின் 2வது மாநில மாநாடு அமையட்டும்” என்று இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

அன்பகத்தில் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற உள்ள தி.மு.கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டுக்காக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மாநிலத் துணைச் செயலாளர்கள் துணைச்செயலாளர்கள் எஸ்.ஜோயல், நா.இளையராஜா, கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார் ந.ரகுபதி (எ) இன்பா ஏ.என்.ரகு, ப. அப்துல் மாலிக், க.பிரபு, கு.பி.ராஜா (எ) பிரதீப்ராஜா,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர் ராஜா, சம்பத், அனைத்து மாவட்ட, மாநகர, மாநில இளைஞர் அணி அமைப்பாளர்கள், நெல்லை மாநகர மேயர் சரவணன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சியுரையாற்றினார்.

முன்னதாக சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகத்தின் அமைப்பாளர், ராஜா அன்பழகன் வரவேற்புரை நிகழ்த்தினார். சேலம் மேற்கு மாவட்டத்தின் அமைப்பாளர், மணிகண்டன் மாநில துணைச் செயலாளர் ஈரோடு பிரகாஷ் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் நன்றி கூறினார்.

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது: -

மிக மிக முக்கியமான ஒரு அமைப்பாளர் கூட்டம். இளைஞர் அணியின் மாநில மாநாடு சேலத்தில் இன்னும் சரியாக 21 நாட்களில் மிகப்பெரிய எழுச்சியுடன் நடைபெற இருக்கின்றது.

இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநிலத்திற்கு, ஒரு மாநில இயக்கத்திற்கு, ஒரு கட்சிக்கு இளைஞர் அணி என்ற ஒரு அமைப்பை உருவாக்கியது எதுவென்றால், அது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான் 1980ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் அவர்கள் துவங்கினார்கள். இளைஞர் அணி தொடங்கி, 43 ஆண்டுகள் முடிவடைந்து இருக்கின்றது. முதல் மாநில மாநாடு திருநெல்வேலியில் 2007ஆம் ஆண்டு நடைபெற்றது. இப்பொழுது 18 ஆண்டுகள் கழித்து, கலைஞருடைய நூற்றாண்டில் இரண்டாவது மாநில மாநாடு, சேலத்தில் நடைபெற இருக்கின்றது.

இந்த நேரத்தில், தலைவருக்கு அந்த வாய்ப்பு கொடுத்ததற்கு இளைஞர்களின் சார்பாக, உங்கள் அனைவரின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### சேலத்தில் மாநாடு: காரணம் என்ன?

பல மாவட்டங்களில் இருந்து இந்த மாநாட்டை நாங்கள் நடத்துகிறோம். `இந்த மாநாட்டை எங்கள் மாவட்டத்தில் நடத்துங்கள்’ என்று பல மாவட்ட கழகச் செயலாளர்கள் தலைவர் அவர்களைப் பார்த்து வேண்டுகோள் வைத்தார்கள்.

தலைவர் என்னை அழைத்துக் கேட்டார்கள். இப்படி எல்லாம் கேட்கிறார்கள் எந்த மாவட்டத்தில் நடத்தப் போகிறீர்கள் என்று கேட்டார்.

நான் சொன்னேன்,

`எந்த மாவட்டத்தில் சென்ற முறை தேர்தலில் நாம் சரியாக பெர்பார்ம் பண்ணலையோ எங்கே நாம் நம்முடைய கழகப் பணிகளைத் தொய்வாக இருக்குதுனு நாம் நினைக்கிறோமோ, அங்கே நாங்க நடத்திக் காட்டுகிறோம்.

இளைஞர் அணி மேல் நீங்கள் நம்பிக்கை வைத்து, அந்த வாய்ப்பைக் கொடுங்கள். சென்ற முறை சட்டமன்றத் தேர்தலில் சேலம் மாவட்டத்தில் நாம் அதிகமான வெற்றி வாய்ப்பை பெறவில்லை. பல்வேறு மாவட்டங்களில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தாலும், சேலத்தில் மிகக் குறைந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றோம்.

இங்கு ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான். அதனால், சேலத்தில் நடத்தலாம். நாங்கள் அங்கே நடத்தி காட்டுகிறோம் நம்முடைய கட்சி அங்கே மீண்டும் சேலத்தையே கட்சியின் கோட்டையாக நாங்கள் மாற்றிக் காட்டுகிற மாநாடாக அந்தச் சேலம் மாநாடு இருக்கும். எங்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள் என்று சொன்னேன்.

எனவே அந்தவிதத்தில்தான் சேலத்தில் நடத்த முடிவானது. மாவட்ட மாநில மாநாடு ஒருங்கிணைப்பாளராக கே.என்.நேரு அவர்களிடம் தலைவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். இதிலேயே பாதி மாநாடு வெற்றிபெற்றது. ஏனென்றால், நம்முடைய கலைஞர் அவர்கள், நேரு அவர்களை அடிக்கடி பாராட்டுவார்.

நான் திருப்பிச் சொல்கிறேன் பாதி வெற்றி தான் அது. மீதி பாதி வெற்றி நம் கையில் இருக்கிறது. அதை நீங்கள் உணர வேண்டும்.

இந்த மாநாடு நடைபெறுகின்ற சமயத்தில் நாமெல்லாம் இளைஞர் அணியில் இருக்கின்றோம், பொறுப்பில் இருக்கின்றோம் என்பது நமக்கு மிகப்பெரிய பெருமை.

இரண்டாவது மாநில மாநாட்டுக்கு இன்னும் கூடுதல் சிறப்பு என்ன வென்றால், முதல் மாநில மாநாடு நடக்கும்போது, எந்தத் தேர்தலும் கிடையாது. பொதுவாக சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் வரும்போதுதான் இயக்கங்கள் எல்லாம் மாநாடுகள் நடத்தும். ஆனால், முதன்முறையாக நம்முடைய தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு அணி ஒரு மாநாடு நடத்தும்போது அதுவும் தேர்தலுக்கு முன்பாக, அதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர வேண்டும். இந்த மாநாட்டை, தலைவர் அவர்கள் நம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள் என்றால், வருகின்ற தேர்தலையே நம்மை நம்பி அவர் ஒப்படைத்துள்ளார்கள் என்று தான் அர்த்தம்.

அப்படி என்றால், அந்தத் தேர்தல் நமக்கு எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டு கொள்கின்றேன்.

கடந்த நான்கு மாதங்களாக மாநாடு அறிவித்த பின்பு, நாம் அனைவரும் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறோம். உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுப்பயணம் சென்று செயல்வீரர் கூட்டத்தைச் சிறப்பாக, எழுச்சியுடன் நடத்தி முடித்திருக்கிறோம்.

### 45 கழக மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டம்!

கடந்த ஆகஸ்ட் மாதம் காஞ்சிபுரத்தில் தொடங்கி, சமீபத்தில், சேலம் வரை இதுவரை மூன்று மாதங்களில் 45 கழக மாவட்டங்களில் இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக் காட்டியுள்ளோம்.

செல்கின்ற இடமெல்லாம் உற்சாகம், இளைஞர் வெள்ளம். எனவே, அந்த அனைத்தும் மாநாட்டிலும் பிரதிபலிக்கும் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த சுற்றுப்பயணம். கடந்த வாரம் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அந்த இளைஞர் அணி செயல்வீரர் கூட்டம்.

நம்முடைய இளைஞர் அணி தலைமையகமான அன்பகத்தின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த அரங்கத்தில் மிகுந்த எழுச்சியோடு



நடைபெற்றது. இந்த நேரத்தில் அந்த மாவட்ட அமைப்பாளருக்கும் மாவட்டச் செயலாளருக்கு என்னுடைய நன்றியை வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் அணியின் அந்த செயல் வீரர் கூட்டமே ஒரு மினி மாநாடு போல நடத்தி காட்டியிருந்தார்கள். முன்னாள் நிர்வாகிகளை எல்லாம் நினைவுகூர்ந்து கொடி மேடை, பந்தலுக்குப் பெயர், மேடைக்குப் பெயர், அங்கே இருக்கக்கூடிய அனைத்து வளைவுகளுக்கும் பெயர் என்று மிக அருமையாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த மாவட்ட அமைப்பாளரும், அந்த மாவட்டக் கழகச் செயலாளரும். அங்கே பழைய இளைஞர் அணி நிர்வாகிகளுக்கெல்லாம் குடும்பத்திற்கெல்லாம் நிதி உதவி அளித்து இருக்கின்றோம். அதேபோல் சேலத்தில் இளைஞர் அணி மாநாட்டையொட்டி ஹீலியம் பலூன் விடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்படி ஒவ்வொரு மாவட்டமும் போட்டி போட்டுக் கொண்டு இளைஞர் அணி செயல்வீரர் கூட்டத்தை ஒரு மினி மாநாடு நடத்திக் கொண்டிருக்கிறோம். அதற்கு, மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேலத்தில் மாநாட்டுத் திடலையும் பார்த்து வந்தேன். அமைச்சர் நேரு மற்றும் அங்குள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், எஸ்.ஆர்.எஸ்.சிவலிங்கம், டி.எம்.எஸ். அவர்களின் ஒருங்கிணைப்பில் அங்குள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் மேற்பார்வையில் மாநாட்டுக்கான பணிகள் மிகுந்த விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இளைஞர் அணி சார்பாக, மாநாட்டுக்கான நிதி பெறுவதற்கான ரசீது புத்தகங்களைக் கொடுக்கவுள்ளோம். 72 கழக மாவட்டங்களில் உள்ள இளைஞர் அணி அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள் மற்றும் மாநில அமைப்பாளர்கள் பெற்று செல்ல இருக்கிறீர்கள்.

500 ரூபாயில் ஆரம்பித்து, நிதியை நீங்கள் பெறலாம். இது எதுவும் கட்டாயத் தொகை கிடையாது. இந்தப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளும் நீங்கள் ஒரு விஷயத்தை மட்டும் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். யாரையும் கட்டாயப் படுத்தி எந்த விதத்திலும் வசூல் செய்யக்கூடாது. முக்கியமாகப் பொது மக்கள், வணிகர்கள் போன்றவர்களிம் இருந்து கட்டாய வசூல் செய்ய வேண்டாம் என்று நான் அறிவுறுத்துகின்றேன். விருப்பப்பட்டுக் கொடுத்தால் சரி இல்லையென்றால், அது நம்முடைய கழகத்தினராக இருந்தாலும் யாரையும் கட்டாயப்படுத்தி வசூல் செய்ய வேண்டாம்.

இந்த ரசீது புத்தகத்தை நாம் எந்த லாப நோக்கத்திற்காகவும் வழங்கப்படவில்லை. இது இந்த மாநாட்டினுடைய ஒரு அங்கம். இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிப்பதற்கு நானும் நம்முடைய துணைச் செயலாளர்களும் எல்லா மாவட்டத்துக்கும் சென்று நேர்காணல் பண்ணும் பொழுது அங்கே இந்த நேர்காணலுக்கு வருபவர்கள் பல மாநாடுகளுக்கு நாங்களும் நிதி உதவி கொடுத்திருக்கிறோம் என்று அந்த ரசீதுகளை எங்களிடத்தில் மிகவும் பெருமையாகக் காட்டினார்கள். நிறைய பேர் அண்ணா காலத்தில், கலைஞர் காலத்தில் இருந்த மாநாடுகளுக்கெல்லாம் நாங்களும் நிதி அளித்திருக்கிறோம் என்று அந்த ரசீதுகளை எல்லாம் எங்களிடத்தில் காண்பிப்பார்கள்.

50 ரூபாய் 100 ரூபாய் என அவர்கள் அப்போது நிதி அளித்ததைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கும். நிதி அளிக்க வேண்டும் என்ற ரீதியில், அவர்கள் அதைச் செய்யவில்லை.

அவர்கள் இந்த மாநாட்டில் அங்கம் வகிக்க வேண்டும். அவர்களும் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி அவர்கள் எல்லாம் அந்த நிதியை அளித்திருக்கின்றார்கள்.

ஆகவே, இந்த ரசீது புத்தகத்தையும் நாம் அப்படித்தான் அணுக வேண்டும். இன்னும் ஐந்து ஆண்டுகள் பத்து ஆண்டுகள் 15 ஆண்டுகள் கழித்து நாம் பின்னோக்கி பார்க்கும் பொழுது இரண்டாவது மாநில மாநாட்டிற்கு நாங்களும் நிதி அளித்தோம் என்று திரும்பிப் பார்க்கின்ற வகையில் இந்த ரசீதுகள் அமைய உள்ளன.

அதுதான் ஒரே நோக்கம் இந்த ரசீது புத்தகத்தின் நோக்கம். அது மட்டுமல்ல, நிறைய மாநிலத் துணைச் செயலாளர்கள், அமைப்பாளர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஏற்கனவே நிறைய மாநாட்டு நிதிகளை அளித்திருக்கிறீர்கள் அதற்கு மீண்டும் இந்த நேரத்தில் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இந்த ரசீது புத்தகங்களை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். இளைஞர் அணிக்கு என்று ஒரு பெயர் உண்டு ஒரு பெருமை உண்டு. அதிலே ஒரு சிறு கீறல் கூட உங்களால் விழுந்து விடக்கூடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

தமிழ்நாட்டின் எந்த மூலையிலி ருந்தும் ஒரு சிறு புகார் கூட இந்தப் புத்தகம் தொடர்பாக வரக்கூடாது. அதற்கு மண்டலப் பொறுப்பாளர்களும் அமைப் பாளர்களும் துணை அமைப்பாளர்களும் பொறுப்பேற்கவேண்டும்.

அடுத்து முக்கியமான விஷயம் மாநாட்டிற்கு இன்னும் சரியாக 21 நாட்கள் இருக்கின்றன. இளைஞர்களைத் திரட்டி வரவழைக்க வேண்டிய பொறுப்பு உங்கள் அனைவருக்கும் இருக்கின்றது.

இளைஞர் அணி மாநாட்டிற்காக டிசர்ட்டுகள் தயார் செய்ய ஆர்டர் கொடுத்துள்ளோம். டிசர்ட்களை மாநிலத் துணைச் செயலாளர் , ஜோயல் அவர்களின் மூலமாக உங்களுக்கு வழங்கப்படும்.

### எழுச்சியோடு நடைபெற்றுவரும் இருசக்கர வாகனப் பேரணி!

நீங்கள் அவற்றை மாவட்டச் செயலாளருடன் கலந்து பேசி, இளைஞர்களிடம் அதைக் கொண்டு சேர்க்க வேண்டும். மாநில உரிமை மீட்பு மாநாடாக நடைபெற உள்ள நம்முடைய இளைஞர் அணி மாநாட்டைப் பட்டிதொட்டி எங்கும் கொண்டு சேர்ப்பதற்காகக் கன்னியாகுமரியில் தொடங்கப்பட்ட அந்த இருசக்கர வாகன பேரணி மிகுந்த எழுச்சியுடன் நடை பெற்றிருக்கின்றது. எங்கு பார்த்தாலும், எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்த மாவட்டச் செயலாளரைச் சந்தித்தாலும், பேரணி இன்று எங்கள் மாவட்டத்துக்கு வந்திருக்கிறது என்று பெருமையாகச் சொல்கிறார்கள்.

எல்லா மாவட்டச் செயலாளர்களும் அந்தப் பேரணியில் பங்கேற்றிருக்கிறார்கள். நம்முடைய கன்னியாகுமரியில் தொடங்கிய அந்த இளைஞர் படை (DMK Riders) இதுவரை 200 தொகுதிகளுக்கு மேல் அவர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று காலை நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டத்தில்கூட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூலம் இளைஞர் அணி மாநாட்டிற்கு இளைஞர்களை அழைத்து வருவது தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய தலைவர் அவர்கள், மாநாட்டைப்பற்றி மிகப் பெரிய ஒரு உரையை நிகழ்த்தினார். நிகழ்ச்சி நிரல், பேச்சாளர்கள் என்னென்ன தலைப்பில் பேசப் போகிறார்கள், இறுதி செய்யப்பட்டு அழைப்பிதழ் அடிக்கும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

கடந்த வாரம் மாநாட்டுக்கான பல்வேறு குழுக்களுடைய செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. மாநாட்டுச் செயலாளர்கள் உங்களுக்குத் தோன்றிய சந்தேகங்கள் குறித்து கேட்டுத் தெரிந்து கொண்டீர்கள்.

இன்றும் மாநாட்டுச் செயலாளர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்களுடன் கலந்து பேசி, தன்னார்வலர்களை நிரூபித்து, அந்தந்த குழுவுக்கு உரிய பணியைச் செய்ய வேண்டும். அதைத் துணைச் செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டும். இளைஞர்களைத் திரட்டி வர வேண்டிய பொறுப்பு உங்கள் அனைவருக்கும் இருக்கிறது. காலையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் தலைவர் அவர்கள் இதைக் குறித்து மாவட்டச் செயலாளரிடம் வலியுறுத்தி கூறியிருக்கின்றார்கள்.

**இந்த ரசீது புத்தகங்களை நல்ல முறையில் பயன் படுத்துங்கள். இளைஞர் அணிக்கு என்று ஒரு பெயர் உண்டு ஒரு பெருமை உண்டு. அதிலே ஒரு சிறு கீறல் கூட உங்களால் விழுந்து விடக்கூடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.**

**தமிழ்நாட்டின் எந்த மூலையிலிருந்தும் ஒரு சிறு புகார் கூட இந்தப் புத்தகம் தொடர்பாக வரக்கூடாது. அதற்கு மண்டலப் பொறுப்பாளர்களும் அமைப்பாளர்களும் துணை அமைப்பாளர்களும் பொறுப்பேற்க வேண்டும்.**

மாவட்டச் செயலாளருடன் இணைந்து இளைஞர்களை அழைத்து வர வேண்டியது உங்களுடைய பொறுப்பு. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் எவ்வளவு பேர் வருகிறார்கள், என்பதை தலைவர் அவர்களும் நானும் தொடர்ந்து கவனிப்போம்.

சேலத்தை ஒட்டியுள்ள மாவட்டக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் மாநாடு நடக்கிற இடத்திற்கு அன்று காலை புறப்பட்டு வந்தால், போதுமானது. மற்ற மாவட்டங்கள் குறிப்பாக சேலத்திலிருந்து தொலைவில் இருக்கக் கூடிய கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி போன்ற மாவட்டத்தினர் மட்டும் முதல் நாள் இரவு வந்து தங்கி விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். முதல் நாளும் ஒரு அரை மணி நேரத்துக்கு நிகழ்ச்சி எல்லாம் நடத்துவதற்கு நாங்கள் பேசிக்கொண்டு இருக்கிறோம். அதெல்லாம் இறுதியான பிறகு நான் சொல்லுகின்றேன்.

### மாநாட்டு ஏற்பாடுகள்!

யாரெல்லாம் அதிகாலை புறப்பட்டு காலை ஒன்பதரை மணிக்கு 10 மணிக்குள் வர முடியுதோ வர முடியாதோ அவர்களெல்லாம் முதல் நாளே வந்து தங்கி விடுவது நல்லது. காலை 9:00 மணிக்கு மாநாடு தொடங்க இருக்கின்றது. கொடியேற்றுகின்ற நிகழ்ச்சி காலையில் நடைபெற உள்ளது. நம்முடைய மாநிலங்களை வைத் துணைத் தலைவர் - கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கழகக் கொடியை ஏற்ற இருக்கிறார்கள்.

அதுபோல் நம் மாணவர் அணியின் செயலாளர் எழிலரசன் அவர்கள் மாநாட்டைத் திறக்க இருக்கின்றார்கள். எனவே, இதெல்லாம் காலை 9 மணிக்குத் தொடங்க இருக்கின்றது.

ஒரு மணிக்கு மதிய உணவு இடைவேளை. அதன்பிறகு மீண்டும் 2 மணிக்கு மாநாடு தொடங்கி, 7 மணிக்கெல்லாம் மாநாடு முடிந்து விடும். 7 மணிக்கு தலைவர் அவர்கள் பேசி 7.30 மணியளவில் மாநாடு முடிப்பதற்கான திட்டம் தீட்டி இருக்கிறோம். ஏனென்றால், அப்போதுதான் மாநாடு முடிந்து, நீங்கள் எல்லாம் பாதுகாப்பாக இளைஞர் அணி தம்பிமார்கள் எல்லாம் பாதுகாப்பாக உங்களுடைய மாவட்டத்திற்குச் செல்ல முடியும்.

தங்குமிடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. காலை உணவை தங்கும் இடத்திலேயே முடித்துவிட்டு, இளைஞர்களை மாநாட்டுத் திடலுக்கு நீங்கள் அழைத்து வந்து விடுங்கள்.

நாள் முழுவதும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. பேச்சு, சிறப்புரைகள், அதேபோல் தெருக்குரல் அறிவு அங்குக் கலைநிகழ்ச்சி நடத்த இருக்கின்றார். புதுகை பூபாலன் குழு ஒரு சிறிய நாடக நிகழ்ச்சி நடத்த இருக்கின்றார்கள்.

நம்முடைய இயக்கத்தின் புகைப்படக் கண்காட்சி அமைய இருக்கின்றது. புத்தக நிலையம் அமைய இருக்கின்றது. அதேபோல் மாநாட்டுத் திடலில் அமர்ந்திருப்பவர்களுக்குத் திடலுக்குள்ளேயே சைவம், அசைவம் என மதிய உணவு வழங்கப்படும்.

தள்ளுமுள்ளு இல்லாமல் திடலுக்குள் உள்ள அனைத்து இளைஞர்களுக்கும் உணவு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டியது நம்முடைய பொறுப்பு.

மாநாடு அன்று நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் நடந்து கொள்கின்ற வகையில் செயல்பட வேண்டும்.

நம்முடைய மாநாட்டில் ஏதாவது ஒரு சின்னத் தவறு நடக்காதா? என்று எதிர் அணியினர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான ஒரு வழியும் கொடுக்காமல் மாநாட்டைச் சிறப்பான மாநாடாக நடத்திக் காட்ட வேண்டும்.

வாகனங்களில் இளைஞர்களை அழைத்து வரும்போது மிகவும் கவனமாக அழைத்து வாருங்கள். அதே போல மாநாடு முடிந்து கவனமுடன் அழைத்துச் செல்லுங்கள்.

### வரலாறு படைக்கும் கொள்கை மாநாடு!

இந்த மாநாடு நாம் கூடி கலைகின்ற மாநாடாக இருக்கக் கூடாது. இது ஒரு கொள்கை மாநாடு. கழக இளைஞர் அணி மாநாடு நடைபெற்றது. அது பாசிஸ்ட்டுகளை வீட்டிற்கு அனுப்பியது என்ற வரலாறு படைக்கின்ற வகையில் ஒரு எழுச்சி மாநாடாக நம்முடைய மாநாடு அமைய வேண்டும் என்று இன்று (நேற்று) காலை மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் உரையாற்றிய போது கூறினார்கள்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் என்னென்ன திட்டங்கள் செய்திருக்கிறோம். அதில் மகளிருக்கு நிறையத் திட்டங்கள் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம்.

எனவே தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து மகளிரும் தி.மு.க. ஆதரவு மனநிலையில் இருக்கிறார்கள் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய இளைஞர் அணி மாநாடு நடந்த பின்பு மகளிர் மட்டும் அல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து இளைஞர்களும் தி.மு.க.வின் பக்கம் நிற்கிறார்கள் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தலைவர் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு, மிகுந்த எதிர்ப்பார்ப்போடு நமக்கு இந்தப் பணியை அளித்திருக்கிறார்கள். எனவே, இங்கே நம்முடைய, பிரகாஷ் அவர்கள் கூறினார்கள். நான் அவரைத் தூங்கவே விடமாட்டேங்கிறேன் என்று. நாம் மநாட்டை முடித்துவிட்டு, அனைவரும் இரண்டு நாட்கள் நிம்மதியாகத் தூங்கலாம்.

எனவே, மாநாட்டின் வெற்றி மிக மிக முக்கியமான ஒரு வெற்றி என்பதை நீங்கள் உணர வேண்டும். இளைஞர் அணி நடத்துகின்ற இந்த மாநாட்டை வெற்றி மாநாடாக்கி கழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துவோம்.

கலைஞருடைய நூற்றாண்டில் நடக்கக்கூடிய இந்த மாநாட்டை மிகப் பெரிய ஒரு எழுச்சி மாநாடாக ஒரு வெற்றி மாநாடாக நடத்தி காட்டுவோம்.

இவ்வாறு இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்வோம்!

# குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!

## ‘இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48’ திட்டத்தில் 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவ சிகிச்சை - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, நவ.30-**

**'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தில் 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில் “சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்வோம்! குடும்பங்களின் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**2008ஆம் ஆண்டிலேயே 108 ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கி னார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.**

**இந்தியாவிலேயே அதிகளவில் மக்கள்தொகைக்கேற்ப ஆம்புலன்ஸ் சேவைகள் தமிழ்நாட்டில் இருந்தாலும், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகமாக இருந்தன.**

**அதனைக் குறைக்க, 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தைக் கடந்த 2021 டிசம்பரில் அறிமுகப்படுத்தினேன்.**

**இந்த இரண்டாண்டுகளில், இன்று 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் என்பதைவிட 2 இலட்சம் பேர்களின் உயிர்களும் உடலுறுப்புகளும் காக்கப்பட்டுள்ளன என்பதே சரி!**




**சாலை விதிகளைப் பின்பற்றிப் பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்வோம்! குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, திருச்சி கிழக்கு தொகுதி கரூர் பைபாஸ் சாலையில் குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடி மரத்தில் கழக இரு வர்ண கொடியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் ஏற்றினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தி.மு.க. கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், சபியுல்லா, மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாநில,மாவட்ட, மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எதையும் சாதிக்கும் திறமை கொண்டவர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் - குடமுருட்டி அருகில் 100 அடி கொடிக்கம்பத்தில் கழகக் கொடியேற்றி - பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

*திருச்சி, நவ.30-*

திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், கரூர் பைபாஸ் சாலையில், குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடி யேற்றி வைத்துப் பேசிய கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள், ‘எதையும் சாதிக்கும் திறமை கொண்டவர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!’ என்று புகழலாரம் சூட்டினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, திருச்சி கிழக்கு தொகுதி கரூர் பைபாஸ் சாலையில் குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடி மரத்தில் கழக இரு வர்ண கொடியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கொடி ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்துரை கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தி.மு.க வின் பொதுச்செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கூட்டத்தை தெற்கு மாவட்ட செயலாளரும் பள்ளி கல்வி துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடக்கி வைத்து பேசினார். அதில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க தெற்கு மாவட்டம் செய்துள்ள பணிகள் குறித்து மூத்த நிர்வாகிகளுக்கு காட்ட விரும்பினேன். அந்த வகையில் எங்கள் ரிப்போர்ட் கார்டை எங்கள் தலைமை ஆசிரியர் பொதுச்செயலாளரிடம் காட்டியுள்ளோம். 2016 ஆம் ஆண்டு நான் தேர்தலில் போட்டியிட விரும்பிய போது நான் ஒரு தொகுதியைக் கேட்டேன்.

அப்பொழுது அந்த தொகுதியை கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கேட்டார்கள். அந்த நேரத்தில் நம்முடைய தற்போதைய தலைவர் “அந்த தொகுதியை என் மகனுக்காக கேட்கிறேன்” எனக் கூறியுள்ளார். அதை என்னிடம் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் கூறினார். அதைக் கேட்டதும் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய அமைச்சர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

ஆயிரம் கொடி இருந்தாலும் தி.மு.க. கொடி போல் எதுவும் இல்லை. அதை பார்க்கும் போதே ஒரு மகிழ்ச்சி வருகிறது. திருச்சியில் சற்று முன்னர் 100 அடியில் கொடியை ஏற்றினேன் கண்டிப்பாக அசந்து போனேன்

எதையும் சாதிக்கும் திறமை அமைச்சர் அன்பில் மகேசுக்கு இருக்கிறது ஆனால் எதுவும் தெரியாதாது போல் நடிக்கும் திறமையும் அவரிடம் உள்ளது. தி.மு.க.வே முதன் முதலில் தேர்தலில் போட்டியிடுவதாக முடிவு செய்து அறிவிக்கப் பட்ட இடமும் திருச்சி தான். அன்பிலார், பொய்யாமொழி ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசி உள்ளேன். தற்போது மூன்றாவது தலைமுறையான மகேஸ் ஏற்பாடு செய்த கூட்டத்திலும் கலந்து கொண்டுள்ளேன். தமிழ்நாட்டின் தலைநகர் மத்தியில் இருக்க வேண்டும் என்றால் அது திருச்சி தான் அப்படியும் காலம் வரும். இயக்கத்தின் உயிர் நாடியே தொண்டர்கள் தான். மற்ற கட்சிகளில் உயிர் நாடி உயிரோடு இல்லை. நம் இயக்கத்தின் மீது வீசிய புயல் இமயமலை மீது வீசி யிருந்தால் இமயமலைசுக்கு நூறாகி யிருக்கும். ஒவ்வொரு தி.மு.க தொண்டனும் கட்சியின் காவல் தெய்வங்கள். இந்தியாவில் எமர்ஜென்சியை எதிர்த்து தீர்மானம் இயற்றிய ஒரே கட்சி திமுக தான். தலைவரின் பெயரை, கட்சியை காப்பாற்றுவாரா நம் தளபதி என்று எண்ணினேன் ஒவ்வொரு இடத்திலும் உற்று நோக்குவேன், இதை நான் ஸ்டாலினிடமும் கூறி இருக்கிறேன் ஆனால் அவர் சிறப்பாக செயல்பட்டுக் காட்டினார்.

இவ்வாறு கழகப் பொதுச் செலயாளர் துரைமுருகன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தி.மு.க. கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், சபியுல்லா, மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன், மற்றும் மாநில,மாவட்ட, மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2023 – ஆண்கள் ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. பஞ்சாப் அணி ஹரியானாவை வீழ்த்திய பரபரப்பான இந்த இறுதிப் போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் தறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டு களித்தார். வெற்றியாளர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சாம்பியன் கோப்பை வழங்கினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சொ.வேலு எம்.சி தலைமையில்

# எழும்பூர் வடக்கு: தூய்மைப் பணியாளர்களுக்கு 3 நாள் தொடர் மருத்துவ முகாம்!

## தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர் நா.எழிலன், மேயர் பிரியா, இ.பரந்தாமன் பங்கேற்பு

*சென்னை நவ.30-*

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தொகுதி தி.மு.க. சார்பில் உடன் பிறப்புகள் கொண்டாடும் கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர் 100-65, ஆயுளை மீட்பது மருத்துவம்! அறிவினில் கலைஞர் தனித்துவம்! நிகழ்ச்சி 1.12.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில் அறிஞர் அண்ணா மாளிகை கொசப்பேட்டையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் எழும்பூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் 3 நாள் டிசம்பர் 1, 2, 3 முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலை துறை, பெருநகர சென்னை வளர்ச்சி குழும தலைவர் பி.கே.சேகர் பாபு முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சிக்கு எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினருமான சொ.வேலு தலைமை வகிக்கிறார்.

இம்மருத்துவ முகாமை டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ துவக்கி வைக்கிறார்.

இதில் தயாநிதி மாறன் எம்.பி,மேயர் பிரியா ராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஒ.எ. நாகலிங்கம், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் உள்ளிட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

# செய்யாறு - சிப்காட் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தி விவசாயிகள் உண்ணாவிரதம்!

*திருவண்ணாமலை, நவ.30-*

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சிப்காட் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலை, மேல்மா கூட்டு ரோட்டில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.



திருவண்ணாமலை மாவட்டம்,செய்யாறுவட்டம், மேல்மா மற்றும் அதனை சுற்றியுள்ள 8 கிராமங்களில் சிப்காட் அலகு 3 திட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வருவதை ஆதரித்து நேற்று முன்தினம் (28.11.2023) காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலை, மேல்மா கூட்டு ரோட்டில் சிப்காட் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு கே.வி.ராஜ்குமார் தலைமையில் மற்றும் அருள்மிகு அம்மை அப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகியோரின் சார்பில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது.

மேற்படி போராட்டம் காலை 11.00 மணி அளவில் தொடங்கப்பட்டது. இதில் 4000 ஆண்கள் மற்றும் 3500 பெண்கள் என மொத்தம் 7500 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.


உத்தரகாண்ட் மாநிலத்தில்

# சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்பு!

## மீட்புக்குழுவினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**டேராடூன், நவ.30-**

**உத்தரகாண்ட் மாநிலத்தில் சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீட்புக்குழுவினருக்கு பாராட்டுகளை சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.**





உத்தரகாண்ட் மாநிலத்தில் உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா மலைப்பகுதியில் 4.50 கிலோமீட்டர் தூரத்துக்கு மலைக்கு கீழ் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடந்துவந்தது.

கடந்த 12ம் தேதி நடந்த சுரங்கப்பாதை விபத்தில் தொழிலாளர்கள் 41 பேர் சிக்கிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து 17வது நாளாக மீட்புப் பணி நடைபெற்றது. நேற்று முன்தினம் மாலை தொழிலாளர்களை மீட்க துளையிடும் பணி நிறைவடைந்தது. இதனால் அவர்களது உறவினர்கள்சுரங்கத்தில்குவிந்தனர்.

இதற்கிடையே, ஒவ்வொரு தொழிலாளராக பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட உள்ளது. மீட்கப்பட்ட தொழிலாளர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



மீட்புப் பணிகளை முதல் மந்திரி புஷ்கர் சிங் தாமி நேரில் சென்று பார்வையிட்டார்.

மீட்கப்ப ட்டவர்களிடம் முதல் மந்திரி கலந்துரையாடினார்.

இந்நிலையில், சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட தொழிலாளர்களை ஒன்றிய அமைச்சர் வி.கே.சிங் வரவேற்றார். தொழிலாளர்கள் மீட்கப்பட்டதும் அப்பகுதி மக்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

**தமிழ்நாடு முதல்வர் பாராட்டு!**

**17 சவாலான நாட்களுக்குப் பிறகு உத்தரகாசி சுரங்க விபத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் வெற்றிகரமாக மீட்கப்பட்டதை அறிந்து நிம்மதி அடைகிறேன்.**

**சில்க்யாரா சுரங்க விபத்து மீட்புப் பணியில் விடாமுயற்சி செய்து, திடத்துடன் போராடித் தொழிலாளர்களை மீட்ட நமது மீட்புக் குழுவினர்கள் மற்றும் ‘எலிவளை’ சுரங்க வல்லுனர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.**

**மீட்கப்பட்ட 41 தைரியமிகு தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் உறுதி படைத்த மனத்துடன் இதிலிருந்து தேறிட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூகவலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் துடுப்பாக்கம் ஊராட்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் புனரமைக்கப்பட்ட குளத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் குளத்தினைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை ,துரை, இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில்

# மருத்துவமனை கட்டிடங்கள் திறப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

கரூர். நவ. 30 -

கழக ஆட்சியில் மருத்துவத் துறை செய்து வரும் சாதனைகளை கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மருத்துவமனை கட்டடங்கள் திறப்பு விழாவில், நாய் பாம்புக் கடிக்கு சுகாதார நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுகிறது. இதயம் காப்போம் திட்டத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் பட்டியலிட்டார்.

கரூர் மாவட்டம் செல்லாண்டிபாளையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ரூ4.70 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் துணை சுகாதார நிலையங்கள் செவிலியர் குடியிருப்பு ஆய்வு கட்டடம் என மாவட்டத்தில் 15 புதிய மருத்துவமனை கட்டடங்களை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம்(குளித்தலை) ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணைமேயர் ப.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் மா சுப்பிரமணியன் பேசியதாவது:

அமைச்சர் செந்தில் பாலாஜி முயற்சியின் காரணமாக கரூர் மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்டபடிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன குறிப்பாக மருத்துவத் துறையில் இதுவரை இல்லாத அளவுக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு கரூர் மாவட்டத்தில் கரூர் மற்றும் குளித்தலை என இரண்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

மக்களை தேடி மருத்துவம் இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48. கலைஞரின் வருமுன் காப்போம். இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம் என்று ஏராளமான திட்டங்கள் இன்றைக்கு கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு குஜராத்தில் இருந்து 120 மருத்துவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்பினை பார்ப்பதற்கு வந்தார்கள். 120 மருத்துவர்களின் குழுக்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவ கட்டமைப்புகளை மூன்று நாட்கள் ஆய்வு செய்தார்கள். உறுப்பு தானம் மாற்று சிகிச்சைகள் இவை அனைத்தையும் பார்த்து ஆய்வு செய்துவிட்டு அவர்கள் நாங்கள் பார்த்த ஆய்வினை பத்திரிக்கை வாயிலாக தெரிவிக்க வேண்டும் என்று ஒப்புதல் கேட்ட போது அமைச்சர் என்ற முறையில் நானும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றேன்.

அப்பொழுது அந்த மருத்துவ நிபுணர்கள், நினைத்தே பார்க்க முடியாது. வெளிநாடுகளில் இல்லாத அளவிற்கு மருத்துவ கட்டமைப்புதமிழ்நாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்பில் உள்ள பத்தில் ஒரு பங்கு தங்கள் மாநிலத்தில் இல்லை என்று வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

ஒன்றிய துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது நமது ஓமந்தூரார் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, கலைஞர் பண்ணோக்கு மருத்துவமனை, முதியோருக்கான சிறப்பு மருத்துவமனை, சைதாப்பேட்டை நகர்ப்புற நல வாழ்வு மையம், மறைமலை நகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இவற்றையெல்லாம் ஆய்வு செய்துவிட்டு பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், நாங்கள் நினைத்தே பார்க்கவில்லை தமிழ்நாடு மருத்துவ கட்டமைப்பில் மிக சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவினை தொடங்கி வைத்தார்கள். அதை பார்த்து வந்தவர் பிரமித்து விட்டார்கள். பத்திரியைளர்களை சந்தித்து மருத்துவத்துறை பாராட்டிருக்கின்றார்கள். மிகப்பெரிய ஒருவர் தமிழ்நாடு மருத்துவதுறைக்கு சான்று அளித்து பெருமை. அளவிற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையின் செயலாளர் அவர்களே தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பினை குறித்து மிகவும் சிறப்பாக பாராட்டி இருக்கின்றார்கள். இப்படி தமிழ்நாட்டில் கரூர் மாவட்டம் மருத்துவத்துறையில் மிகச் சிறப்பான அளவிலான மகத்துவம் பெற்ற மாவட்டமாக விளங்கி வருகின்றது மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் அனைத்து அமைச்சர் இடத்திலும் அன்போடு பழகியும். நட்போடு பழகியும் கரூர் மாவட்டத்திற்கு தேவையானவற்றை கேட்டு பெற்று அவை நிறைவேற்று தருவதில் முன்னணி அமைச்சராக இருந்தவர். அதனால் தான் கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவமனை திறந்து வைத்தார்கள். ஏற்கனவே ஐந்து சுகாதார நிலை யங்கள் துணை சுகாதார நிலையங்கள் இப்பொழுது பதினைந்து கட்டிடங்கள் திறந்து இருக்கின்றது. இன்னும் 25 கட்டிட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு என்று 50 கோடி செலவில் பணிகள் முடித்து தொடங்கப்பட இருக்கின்றது. இவ்வளவு பணிகளும் நடைபெறுவதற்கு எல்லா வகையிலும் மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி, மாண்புமிகு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல், அறிவுறுத்தலையும் பெற்று கரூர் மாவட்டத்திற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்.

அனைத்து மருத்துவமனைகளிலும் பாம்பு நாய் கடிக்கும் மருந்துகள் அளிக்கப்படுகின்றது. கடந்த ஆட்சியில் இந்த மருந்துகள் கிடைக்காத நிலை இருந்தது. கழக ஆட்சியில் தான் 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களில் பாம்பு கடி மருந்து மற்றும் நாய் கடி மருந்து 2288 மருத்துவமனைகளிலும் இப்பொழுது மருந்து இருப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆட்சியில் கிராமங்களில் குக்கிரமங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் பாம்பு மற்றும் நாய் கடிகளுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அல்லது அரசு மாவட்ட தலைமை மருத்துவமளைக்கு வர வேண்டும் ஆனால் இப்பொழுது அந்த தேவை இல்லை அனைத்து கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு மற்றும் நாய்க் கடிக்கு ஆன மருந்துகள் கிடைக்கும் என்ற நிலை உருவாக்கி இருக்கின்றது.

இதயம் காப்போம் திட்டத்தின் மூலம் 8713 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நகர்ப்புற சுகாதார நிலையங்கள் ஏறத்தாழ 10000 மருத்துவமனைகளிலும் இன்றைக்கு 14 வகை மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாத்திரைகளை ஆரம்ப நிலையில் மாரடைப்புக்கான அறிகுறி வருபவர்களுக்கு அந்த மாத்திரையை தந்தால் அந்த உயிரினை தற்காலிகமாக பாதுகாக்கப்படும். ஒரு 4 இல் இருந்து 5 மணி நேரம் அவருடைய உயிரினை பாதுகாக்கப்படுகிறது எனவே அந்த வகையில் மருத்துகளை இன்றைக்கு 10990 மருத்துவ மனையில் இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது இதற்கு முன்னால் மருத்துவத்துறை வரலாற்றில் வேற எப்போதும் இது போன்ற மருத்துகள் மருத்துவமனையில் இருத்தது இல்லை.

அந்த வகையில் பாதிப்போடு வந்தால் 14 வகையான மாத்திரைகளை செவிலியர்கள் அவர்களிடம் தருவார்கள். மூன்று வகையான இந்த 14 மாத்திரைகளை உடனடியாக தந்தால் அவர்களுடைய உயிர் பாதுகாக்கப்படுகிறது.

நான் மருத்துவமனைக்கு வந்த உடனேயே எனது உயிரை காப்பாற்றி 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் அங்கு எனக்கு தீர சிகிச்சை செய்யப்பட்டு நன் இப்பொழுது நலமுடன் உள்ளேன் என்று உயிர் பிழைத்தவர்கள் கூறியிருக்கின்றார்கள். நான் உயிர்பிழைத்ததற்கு தளபதி மு .க ஸ்டாலின் அவர்களின் அரசு தான் காரணம் என்று மகிழ்ச்சியோடு சொல்கின்ற அந்த நிலையினை கேட்டும் போது மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இன்றைக்கு 6000த்திற்க்கும் மேற்பட்டோர் உயிர் பிழைத்து இருக்கின்றார்கள். இப்பொழுது இந்த மருத்துவமனையில் கூட இப்பொழுது இரண்டு ப பயன் பெற்றிருப்பதாக பட்டியலை தந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், கரூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார். கரூர் மருத்துவமனை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. தாமோதரன், இணை இயக்குனர் (நலப்பணிகள்) மரு.ரமாமணி.

துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு சந்தோஷ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வாணீஸ்வரி, மாநகராட்சி மண்டல தலைவர்கள் ஆர்.எஸ். ராஜா, எஸ்.பி. கனகராஜ், சக்திவேல் மற்றும் உள்ளாட்சி பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

## வில்லிவாக்கத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, நவ. 30 –

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணி மற்றும் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பபில், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுதலின்படி, வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மோரை கோ. தயாளன் தலைமையில் நடைபெற்றது.

புதிய கன்னியம் நகரில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி துனை அமைப்பாளரும், மாவட்ட கவுன்சிலருமான மோரை மு.சதிஷ் குமார் ஏற்பாட்டிலும் அன்னை தெரேசா கல்வி மற்றும் அறக்கட்டளை இல்லத்தில் ஆதரவற்றோர்களுக்கு மதிய அசைவ விருந்து மோரை க.இளமாறன் (இளைஞர் அணி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம்) ஏற்பாட்டிலும் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலத்தூர் ஏழுமலை, பமதுகுளம் அண்ணாதுரை, பொத்தூர் மாரி, பாலவேடு இரவிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சங்கத் தமிழ் ஈன்ற புறநானூறு!



### (முத்தைத் தரு பத்தித்திருநகை. பாடல் சந்தம்)

காலை முதல் மாலை இரவிலும்
நட்ட நடு இரவுப் பொழுதிலும்
வெற்றிச் சுடர் வேர்வை வடிக்கிற
அவர் யாரு

பள்ளிகளில் துள்ளி வருகிற
பிள்ளைகளின் காலை உணவினை
அள்ளித்தரும் தாயின் குணம்
அவர் யாரு
அன்பின் மதி
பண்பின்மதி அவர் பெண்கள் பெறும் மாத
நிதியினைத் தந்தை என வந்துத் தருகிற
அவர் யாரு
இல்லங்களில் கல்வி தருகிற வீடுகளில் தேடி
வருகிற மாத்திரை மருந்து தருகிற
அவர் யாரு
கற்றலிலே நிற்றல்ஆகுற
பிள்ளைகளும் கல்வி பெறுகிற
திட்டங்களில் வெற்றி பெறுகிற
அவர் யாரு

இன்னுயிரைக் காப்போம் என்றவன்
மண்ணுயிரைப் போற்றும் மன்னவன்
மக்கள் கடல் என்றும் உயிர் என்றவன்
அவர் யாரு

தாயின் மொழி கோயில் முழங்கிட
தங்கத்தமிழ் எங்கும் மலர்ந்திட

எல்லோருமே அர்ச்சகர் என்றவன்
அவர் யாரு

வங்கிகளில் தங்க நகைகளில்
பெற்ற கடன் நீக்கச் செய்தவன்
தள்ளுபடி செய்த தலைவனே
அவர் யாரு

பெருமை எனப் பெண்ணைச் சொன்னவன்
கருணையிலே நிதியைத் தந்தவன்
உரிமைத் தொகை என்றே தந்தவன்
அவர் யாரு

மேலோர் என யாரும் இல்லையே
கீழோர் என யாரும் இல்லையே
எல்லாம் இனி ஒன்றே என்றவன்
அவர் யாரு
மானம் தன் மானஆட்சியில்
தெய்வத்தமிழ் ஆளும் காட்சியில்
வானம் என காக்கும் மன்னவன்
அவர் யாரு

வேர்வை யிலை வெற்றி பெற்றவன்
வெல்லும் தமிழ் வீரத் தமிழ் மகன்
வெண்ணிலவு ஞானச்சூரியன் அவர் யாரு
கலப்பை நிகர் கால்கள் கொண்டவன்
உழைப்பே தன் உயிராய்க் கொண்டவன்
கோட்டையிலே குறிஞ்சி மலர் அவன்
அவர் யாரு
ஊசிமணி பாசி விற்பவன்
உள்ளங்களில் தாயாய் நிற்பவன்
பேசும் மொழித் தேனைத் தருபவன்
அவர் யாரு
தூய்மையெனத் தொண்டு செய்பவன்
வாய்மை என வாழும் தமிழ் மகன்
நேர்மை விழி நீதி நெறியவன்
அவர் யாரு
பாதங்களில் நாட்டை அளந்தவன்
பயணங்களில் நதியாய்ச் செல்பவன்
காற்று என வாழ வைப்பவன்
அவர் யாரு
பள்ளி நம் பெருமை என்றவன்
பாடம் எழுத்தறிவு தந்தவன்
எண்ணம் தரும் எழுத்தைத் தருகிற
அவர் யாரு
கிராம சபை கூட்டம் படைத்தவன்
சேம நலத் திட்டம் வகுத்தவன்
பூமி எலாம் போற்றும் தமிழ் மகன்
அவர் யாரு
எதிரிகளை உதிரி ஆக்கிடும்
உதயநிதி உழைப்பை வாழ்த்திடும்
புதுமைகளை நாட்டில் புகுத்திடும்
அவர் யாரு
சங்கத் தமிழ்ஈன்ற புறநானூறு



முனைவர் சொற்கோ
**இரா.கருணாநிதி**
(பேராசிரியர் - பாடலாசிரியர்)

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# தொண்டர் அணி சார்பில் கருத்தரங்கம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரை!

புதுக்கோட்டை நவ.30

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க மாவட்ட தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்

இன்று (30.11.2023-வியாழன்) காலை 10.00 மணியளவில் கே.வி.எஸ் மஹால் ஏசி (பட்டுக்கோட்டை ரோடு) அறந்தாங்கியில் கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் மு. கருணாகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

சட்டம், நீதிமன்றங்கள் சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார்.

கருத்தரங்கம் சிறப்பு அழைப்பாளராக மாநிலங்களவை குழுத் தலைவர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை அமைசசர், தலைமை செயற்குழு உறுப்பினர், ஒன்றிய கழகச் செயலாளர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், அறந்தாங்கி ராஜன் எம்.எம்.அப்துல்லா எம்.பி,பரணி இ.ஏ.கார்த்திகேயன், சுப.சரவணன், மிசா. ராமநாதன், டாக்டர் ரகு. அண்ணாமலை ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். அ.சுப்ரமணியன், ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.அடைக்கலம், ஜெ.அபுதாகீர், க.ராஜேந்திரன், சு. உதயம் சண்முகம், வே. பொன்துரை, டி.தங்கமணி. பொன்.கணேசன், அரு. வடிவேல்,

கே.எஸ்.ரவி, எஸ்.எம். முகமது அப்துல்லா. சக்தி இராமசாமி, அ.முத்து, எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு, அ.அடைக்கல மணி, ஏ.ஆர்.அழகு சிதம்பரம். ஆர்.கணேசன், பொன்.ராமலிங்கம், வி. ஆர்.இளையராஜா, கே. சி.சிவக்குமார், ஏ.பழனி குமார், அ.அழகப்பன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே. கலைமணி, எஸ்.ஜெயராமன், இரா.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.வி.செல்வம், சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்பிர மணியன். என். வீரையா, ரெத்தினவேல், க.கலைவாணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.மணிராஜன், சிவ. பால.இளங்கோ, ஆ.கலைச்செல்வன். தி.முத்து, டாக்டர் சுதர்சன், இ.ஏ.பெரிய கருப்பன்,

ராமலிங்கம், எல். சுந்தர பாண்டியன், எஸ்.என்.குமரேசன், ஏ. பாத்திமா பீவி, கே.ஆர்.இராமசாமி, ஹரி விமலாவதி, மணிகண்டன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், டி.வளர்மதி, பொன்.லோகநாதன், சர்வேயர் நடேசன், ரம்யாபாலு, அப்துல் ஹமீது, சக்திவேல், எம். தேவி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சாமி.சுரேஷ், எஸ். காளீஸ்வரன், ராஜ சரவணன், என்,ராஜா, நா.சரவணன். கே.நாகராஜன், கே.வி.மயில்வாகணன், டி. வி.சாத்தையா, ந.செ.முத்தையா. ரமேஷ் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் சோ.ஆறுமுகம் நன்றி கூறுகிறார்.



கடலூர் பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக கடலூர் சிங்காரதோப்பைச் சேர்ந்த சக்திவேல் என்பவரின் வீட்டு மேற்கூரை இடிந்து சேதம் அடைந்து விழுந்தது. இத்தகவல் அறிந்த கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. சம்பவ இடத்திற்குச் சென்று இடிந்து சேதமடைந்த வீட்டினை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் தாசில்தார் விஜய் ஆனந்த், வருவாய் ஆய்வாளர் சஞ்சய், மாநகராட்சி கவுன்சிலர்கள் கர்ணன், பிரகாஷ், சரத் தினகரன், சுமதி ரங்கநாதன், பாரூக் அலி, ராதிகா பிரேம்குமார், மகேஸ்வரி விஜயகுமார், கீர்த்தனா ஆறுமுகம், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், லட்சுமி செக்யூரிட்டி சர்வீஸ் தினகரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கோமதி சம்பத், கலைமணி, பாபு, பிரகாஷ், ரோட்டரி ராசன், யுவராஜ், செந்தில், வெங்கடேசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

காரைக்குடியில் மகளிர் தொண்டர் அணி சார்பில்

## நலத்திட்ட உதவிகள்!

### மு.தென்னவன் வழங்கினார்!

சிவகங்கை நவ.29-

கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ஏற்பாட்டின் பேரில் காரைக்குடியில் 24 வட்டத்தில் நகர கழக செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் கழக கொடியினை ஏற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். தொடர்ந்து ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடைகளை வழங்கினார்.



கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி,தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர். பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பி.பள்ளிப்பட்டி ஊராட்சியின் கிளைக்கழகங்களின் சார்பில் கார்மேல் அன்னை ஊராட்சி தொடக்கப் பள்ளியில் ஊராட்சிமன்றத் தலைவர் திருமலாதினேஷ் ஏற்பாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள், நோட்டு பத்தகம், பேனா, பென்சில் வழங்கப்பட்டது. உடன் கிளைகழக செயலாளர்கள் இராஜேந்திரன், சுகந்திரம், ஜனா மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி லிமிடெட் மற்றும் கும்பகோணம் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வக புதிய கட்டிடத்தினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், நகராட்சி நிர்வாக இயக்குநர் க.சிவராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), க.அன்பழகன் (கும்பகோணம்), மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்த

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - தேர் அலங்கார ஊர்தி!

## கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

கரூர், நவ.30-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி முத்தமிழ்த் தேர் அலங்கார ஊர்தி வருகைக்கு கரூர் மாவட்டத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கலைஞர் அவர்களின் புகழை போற்றிடும் வகையில் 'எழுத்தாளர் கலைஞர்" குழுவின் சார்பில் "முத்தமிழ்த்தேர்" அவங்கார ஊர்தி கரூர் மாவட்டம் புன்னம் சத்திரம் வந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் மலர்தூவி வரவேற்று முத்தமிழ்த் தேரினை திறந்து வைத்து பார்வையிட்டார். அரவக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ. ஆர். இளங்கோ முன்னிலை வகித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவ்விழாவினை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்றாக"எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட் டிற்கு ஆற்றிய அரும்பணிகள் மற்றும் அவரது. பரிமாணங்களை போற்றிடும் வகையில் பல்வேறு முன்னெடுப்புக்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், இன்றைய தலைமுறையினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை எடுத்துக் கூறும் வகையிலும் எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், கலைஞர் அவர்களின் புகழ் பாடும் 'முத்தமிழ்த்தேர்' அலங்காரஊர்தி பவனி வருகிறது.

முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி 04.11.2023 முதல் 05.12.2023 வரை அனைத்து மாவட்டங்களுக்கு பயணிக்கின்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளது

1. புன்னம் சத்திரம் பேருந்து நிலையம் (கரூர் செல்லும் வழி) 2கரூர் பேருந்து நிலையம். 3 குமாரசாமி பொறியியல் கல்லூரி எதிரில் (சேலம் செல்லும் வழி) ஆகிய மூன்று இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டது.

கரூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழாவில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி தலைமையில் கரூர் மாநகராட்சி மேயர். க. கவிதா முன்னிலையில் மலர்தூவி பொதுமக்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் வரவேற்றனர் குமாரசாமி பொறியியற் கல்லூரி அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் மலர் தூவி வரவேற்றனர்.

"முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி வருகை முன்னிட்டு மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 100 மரக்கன்றுகளை நடும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்.

இந்திகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் ஷிகா சுந்தரி, தனித்துணை ஆட்சியர் சைபுதீன் ஒருங்கிணைப்பு மேற்கொண்டனர்.

இந்திகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் கரூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார். மண்டல தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, சக்திவேல் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### "ஆயிரம் பேர் ரத்தம் சிந்திபோராடினாலும் பெறமுடியாத திட்டத்தை

# ஒரு துளி பேனா மையால் நிறைவேற்றித் தந்தவர் கலைஞர்"

## இலவச பட்டா வழங்கும் நிகழ்வில் பூண்டி கே.கலைவாணன் புகழாரம்!

திருவாரூர், நவ.30-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், தேவகண்டநல்லூர் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் சார்பில் நன்னிலம் மற்றும் குடவாசல் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் 1212 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 22 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டு மனைப் பட்டாவினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் வழங்கினார். எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஊராட்சிபெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, உமாராணி பாலச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் உடனிருந்தார்.

மண்ணின் மைந்தர் முதமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்வில் திருவாரூர் வட்டத்திற்குட்பட்ட 782 பயனாளிகளுக்கு தலா ரூ.45000 மதிப்பீட்டிலும், நன்னிலம் வட்டத்திற்குட்பட்ட 200 பயனாளிகளுக்கு தலா ரூ.30000 மதிப்பீட்டிலும், குடவாசல் வட்டத்திற்குட்பட்ட 230 பயனாளிகளுக்கு தலா ரூ.48000 மதிப்பீட்டிலும் என 1212 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 22 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டது .

இந்த விழாவில் பேசிய பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது உரையின்போது

"மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் அன்றே இலவச வீட்டுமனை பட்டாக்களை குடும்ப தலைவியின் பெயரிலேயே வழங்கி பெண்களுக்கு பெருமை சேர்த்தவர். பொதுவுடைமை இயக்க தலைவர்களில் ஒருவரான நமது மாவட்டத்தை சேர்ந்த மணலி சி.கந்தசாமி அவர்கள், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தந்த இலவச மனைப்பட்ட திட்டத்தை பற்றி கூறும்போது, "ஆயிரம் பேர்போராடி ரத்தம் சிந்தினாலும் பெறமுடியாத இலவச மனைப்பட்டா திட்டத்தை, ஒரு துளி பேனா மையால் கையெழுத்திட்டு நிறைவேற்றித்தந்தவர் கலைஞர்" என்று பெருமைப்பட தெரிவிக்கிறேன்.

தமிழ்நாட்டில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சியில் பெண்கள் சமையலறையில் படும் அவதியை அறிந்து இலவச கேஸ் இணைப்பு தந்தார், அதேபோல் பெண்கள் திருமண உதவி திட்டத்தை அறிமுகப்படுத்தி அதற்கு அளவு கோளாக எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு என கல்வித்தகுதிகளை படிப்படியாக உயர்த்தி அதன்வழியாக பெண்களின் கல்வியை உயர்த்தினார். அதன் வழி தொடரும் திராவிட நாயகர் முதல்வர் தளபதி அவர்கள் பெண்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், பெண்கள் உரிமைத் திட்டம், இலவச பேருந்து பயணம் என பல அறிய திட்டங்களை தந்து பெண்களின் மேன்மையை உலக அரங்கில் உறுதிப்படுத்தி வருகிறார். பெண்களின் முன்னேற்றம் மட்டுமே குடும்பத்தின் முன்னேற்றம், அதுவே நாட்டின் முன்னேற்றம் என பொற்கால ஆட்சியை தளபதி அவர்கள் நாடே போற்றும் வகையில் தந்துவருகிறார் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் மண்டபத்தில் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு நோக்கு கூட்டம் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ மற்றும் எம். செல்வராஜ்எம்.பி., மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் பங்கேற்றனர்.

இ ந் நி க ழ் வு க ளி ல் , மாவட்ட வருவாய் அலுவலர் சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் வாரை. எஸ்.பிரகாஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.உமாமகேஸ்வரி, ஊராட்சிமன்றத் தலைவர் கேப்டன் எம்.ரவி, வட்டாட்சியர் நக்கீரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணியர் நிழலகத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், சட்ட மன்ற உறுப்பினர்கள் முகமதுஷாநவாஸ், நாகைமாலி, நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.

# நிலைகெட்ட மாந்தரே நெஞ்சு பொறுக்குதில்லையே!

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



"நெருப்போடு விளையாடாதீர்கள்" இது நம்முடைய வார்த்தைகள் அல்ல. மக்கள் மிகவும் நம்பிக்கை வைத்திருக்கும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள் பஞ்சாப் அரசாங்கம், அம்மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தின் செயலற்று இருக்கும் தன்மையை தவிர்த்து, அவரை விரைந்து செயல்பட்டு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை கையெழுத்திட்டு உடனே அனுப்பிட வலியுறுத்திப் போடப்பட்ட வழக்கில், எல்லையற்ற வானளாவிய அதிகாரம் பெற்றதாக எண்ணிக் கொண்டிருக்கும் ஆளுநருக்கு எதிராக எச்சரிக்கை விடும் வண்ணம் கூறிய வார்த்தைதான் அந்த வார்த்தை.

அந்த வார்த்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசின் முதல்வர் தலைமையிலான அமைச்சரவை சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாக்களை ஆண்டுக்கணக்காக, மாதக்கணக்காக நிறுத்தி வைத்திருப்பதை தவிர்த்து அந்த மசோதாக்களுக்கு உடனே கையெழுத்திட்டு அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று அரசியல் சாசனப் பிரிவு 157 மற்றும் 158 படி அதிகார பலமில்லாத ஆளுநர்களுக்கு அவர்களின் பலம் என்ன என்பதையையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமே மேன்மையானது என்பதையும் இந்தியாவின் தலைமை நீதிபதி சட்டம் அறிந்த வல்லுநர், அறிஞர் கூறிய எச்சரிக்கை வார்த்தைகளாகும்.

"Don't play with the Fire"இந்த வார்த்தையின் அர்த்தம் ஐ.பி.எஸ். படித்த ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவத்தின் ஆணிவேரை அறுத்தெறிந்துவிட்டது. அதன் அடையாளம் தான் பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்பட்ட பத்து மசோதாக்களை உடனே தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

நாளையே இவருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் தான் எல்லா மசோதாக்களையும் அரசுக்கே திருப்பி அனுப்பிவிட்டேன் என்று தப்பித்துக் கொள்ளலாமல்லவா! அதற்காக ஆளுநர் ஆடியுள்ள சித்து விளையாட்டுத்தான் இந்தச் மசோதாக்களை திருப்பி அனுப்பிய செயல்.

இந்த சூட்சுமத்தையும், தந்திரத்தையும் தெரியாதவர்களா சட்டம் அறிந்த நீதிபதிகள். எந்த ஆயுதத்தை எடுத்தால் எதேச்சதிகார எத்தர்களுக்கு எப்படி வலிக்கும் என்பதை அறியாதவர்களா அவர்கள். ஒருவன் என்ன ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதே அவனின் எதிரிகள்தான் என்று கூறுவார்கள். எனவே என்ன நடக்கப் போகிறது என்பதை நாடு காணத்தானே போகிறது. எப்படியோ புரோகித்திற்கு விட்ட எச்சரிக்கை ரவிக்கு தொடை நடுக்கத்தைத் தந்து விட்டது.

எதற்கப்பா உமக்கு இந்த வீம்பும், வீராப்பும்? அதை வைத்து என்ன சாதிக்கப் போகிறீர்? அதிக பட்சம் ஆளுநர் பதவிதான்! அதையும் பெற்று விட்டீர்கள். பின் ஏன் ஒன்றிய அரசுக்கு ஒத்தூதும் வேலையை இவ்வளவு பணிவோடு பார்க்கிறீர்? குடியரசுத் தலைவர் பதவி மீது ஆசையா? அதற்கின்னும் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமே?

அதற்கிடையில் 2024 தேர்தல் வரப்போகிறது. வண்டவாளம் தண்டவாளம் ஏறப் போகிறதா? அல்லது தலை கவிழ்ந்து சாயப் போகிறதா? என்பதை ரவியே பார்க்கத்தானே போகிறீர்.

தன் தாய் மொழியைக் காக்க இந்தி மொழியைத் திணிக்க அன்றைய ஒன்றிய அரசு முயன்றபோது கொண்டு வந்து நிறுத்தப்பட்ட ராணுவ பீரங்கிகளின் முன் மார்பைக்காட்டி மடிந்தாலும் மடிவோமே ஒழிய இந்தி மொழியை எந்நாளும் ஏற்க மாட்டோம் என்று இடிமுழக்கமிட்டு அன்றைய ஆட்சியாளர்களின் குண்டுகளை மார்பில் கூட அல்ல நெற்றியில் தாங்கி நிலத்திலே அல்ல! அல்ல!! தன் தாய் மடியில் சாய்ந்திடும் போதும் தமிழ் முழக்கமிட்டு மாண்ட மாணவர்கள், தீக்குளித்து மாண்ட மறத் தமிழ் பட்டாளம், நஞ்சுண்டு இறந்த இலட்சிய வீரர்கள் நூற்றுக் கணக்கானவர்களை இழந்த மண் தாய் தமிழ் மண்.

எந்த ராஜாஜி இந்தியை திணிக்க முயன்றாரோ அந்த ராஜாஜியே வேண்டாம் இந்தித் திணிப்பு என்று அன்றைய முதல்வர் பக்தவச்சலத்திடம் கெஞ்சிக் கேட்டது வரலாறு. தமிழர்கள் விரும்பாதவரை இந்தி திணிக்கப்படமாட்டாது என்று பிரதமர் நேருவை சொல்ல வைத்த தீரர்கள் நிறைந்த நாடு தமிழ்நாடு. உலகவரலாற்றில் ஒரு மொழி காக்க நூற்றுக்கணக்கில் உயிர் விட்டவர்கள் தமிழர்கள்தான். ஆளுநர் ரவியே! ராஜாஜியை விட நேருவை விட வல்லமையும் அறிவாற்றலும் மிக்கவரா நீர். போ! பல்கலைக்கழகங்களெல்லாம் உம் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்என்று எண்ணுகிறீரே போய்பாரும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில்! அங்கே நெற்றியில் சுடப்பட்டு வீழ்ந்தானே தமிழ் மறவன் சிவகங்கை ராசேந்திரன் அந்தத் தீரனின் செழுமை மிக்க முகம் கொண்ட சிலையைப் பாரும். உயிர்தான் இல்லை சிலையாய் தமிழாய் வாழ்ந்து நின்று கொண்டிருக்கும் அந்த மாணவப் புலியைப்பார்.

அறிஞர் அண்ணா அவர்களின் நாடாளுமன்ற உரையை ரசித்து கேட்ட நல்ல மனிதர் வாஜ்பாய் தற்போது இல்லை. அவர் உயிருடன் இருந்திருந்தால் தி.மு.கவைப் பற்றியும் அண்ணா அவர்களைப் பற்றியும் எல்லோரும் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது அவரைக் கைவிட்ட பின்னும் கரம் கொடுத்துக் காப்பாற்றிய கலைஞர் அவர்களைப் பற்றியும் உம்மைப் போன்றவர்களுக்கு புரிந்திட சொல்லி இருப்பார்.

கார்கில் யுத்தத்தை பாகிஸ்தான் தொடுத்த போது அதில் மாண்ட வீரர்கள் எத்தனை பேர் தமிழர்கள் தெரியுமா? தியாகத்திற்காக பிறந்தவர்கள் தமிழர்கள். உலகப் பணக்காரர்களும், கார்ப்பரேட் நிறுவனங்களும் ரூ.15 லட்சம் கோடிக்கு மேல் வாராக்கடன் தள்ளுபடியால் பயன் பெற்றவர்களும் யார்? அதில் தமிழர்கள் யாரேனும் உண்டா? எல்லாம் குஜராத்காரர்கள். குஜராத்தியர் எத்தனைப் பேர் கார்கில் போரில் உயிர் நீத்தவர்கள்? விரல்விட்டுச் சொல்ல முடியுமா? அந்த கார்கில் போருக்காக இந்தியாவிலேயே அதிகம் நிதி ஐம்பது கோடி ரூபாய் கொடுத்தவர் கலைஞர் அவர்கள் மட்டும் தான்.

கலைஞர் அவர்கள் நினைந்திருந்தால் பிரதமராகவும் ஆகி இருக்கலாம்! குடியரசுத் தலைவராகவும் ஆகி இருக்கலாம்! பதவி பித்தர் அல்ல கலைஞர். மொரார்ஜி தேசாய் யாருக்கும் அடங்காதவர். அந்த மனிதரை ஒரே கேள்வியில் உணர்வற்றவராய் உட்கார வைத்தவர் கலைஞர் அவர்கள். அத்தகைய ஆளுமை மிக்கவர் வழியில் வந்தவர்தான் இன்றைய எங்கள் தலைவர்-முதல்வர் தளபதி அவர்கள்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் போன்றோர்களின் ஒரே வடிவாய், உணர்வால், ஆளுமையால், கொள்கையால், தமிழர்களின் மானமாய், திராவிட இன உணர்வாய், அண்ணாவின் பொறுமையாய் வாழ்ந்து ஆட்சி செய்து வரும் முதல்வர் தான் எங்கள் கழகத் தலைவர் தளபதி. அவரது தியாக வரலாறு பெரியது! அவர் பட்டுக் கம்பளத்தில் பவனி வந்து உச்சப் பதவியில் உட்கார்ந்தவர் அல்ல!

கொடுஞ்சிறை, குண்டாந்தடி அடி, எதிரிகளின் ஏகடிய இழிமொழிகள் எத்தனை, பக்கத்தில் இருந்து பள்ளம் தோண்டி தள்ளப் பார்த்தவர்கள் எத்தனை, வீசப்பட்ட வசை வார்த்தைகள், ஏளனச் சிரிப்பென்ன, இடித்துரைத்த பேச்சுகள் தான் என்ன அத்தனையையும் தாங்கிக் கொண்டு சரித்திரம் படைத்த சாதனையாளர்தான் எம் தமிழ்நாட்டு முதல்வர் தளபதி அவர்கள். வரலாறு தெரியாத ஆளுநர் ஆர்.என்.ரவியே இனியாவது இருக்கும் சொற்ப காலத்தை அற்ப நாட்களை அர்த்தமுள்ள நாட்களாக்கி வாழ முயலுங்கள்.

உங்களுக்கு வேண்டுமானால் நாகலாந்திலிருந்து விரட்டப்பட்டது சாதாரண சம்பவமாகத் தெரியலாம் எங்களுக்கு உங்களை தமிழ் நாட்டிலிருந்து விரட்டியடிப்பதை வேதனையான வேலையாகத்தான் கருதுகிறோம். தனிமனித ரவியாக நாங்கள் உம்மை பார்க்கவில்லை. இன்றைக்கும் தமிழ்நாட்டு ஆளுநராகத் தான் பார்க்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைப்படி ஆட்டுக்கு தாடி தான் ஆளுநர் பதவி. அது தான் தி.மு.க வின் கொள்கையும். இருந்தாலும் சங்கடங்கள் பல தந்த போதும் ஆளுநர் பதவி இருக்கும்வரை அதற்கு மதிப்பு தந்து வரும் தலைவர் தான் எங்கள் முதல்வர். மசோதாக்களில் ஆளுநர் கையெழுத்திட உச்சநீதிமன்றம் சென்றதும் ஒரு மாநிலத்தைப் பற்றி பிரதமரை பேச வைக்க நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்ததும் இந்திய வரலாற்றில் கறுப்புப் பக்கங்கள். அதற்கு காரணம் பா.ஜ.க.

குஜராத்தில் மோடி முதல்வராக இருந்த போது 14 பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் உள்பட ஆளுநருக்கு இருந்த அனைத்து முக்கிய அதிகாரங்களையும் பறிக்கும் வகையில் 2013ல் குஜராத் சட்டப் பேரவையில் மசோதாக்கள் நிறைவேற்றி அனுப்பினார். அப்போதைய ஆளுநர் கையெழுத்திடவில்லை. பின்பு 2015ல் பிரகாஷ் கோஹ்லி என்ற ஆளுநரை மோடி பிரதமராக வந்தபின் நியமித்து தான் கையெழுத்து வாங்கினார்.

அசாம் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட குலாப் சந்த் கட்டாரியா ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூர் தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர் தாராசந்த் ஜெயினுக்காக வாக்கு கேட்டு பரப்புரை செய்தாரே! இது எந்தவிதத்தில் சரி -இதை ஒரு ஆளுநர் செய்யலாமா?

பா.ஜ.க. ஆட்சியில் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளுநர்கள் 10 பேர் பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள். மீதம் 3 பேர் பா.ஜ.க. ஆதரவு அதிகாரிகள். இவர்களிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? அப்படிப்பட்ட ஒருவர் தான் தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி. அந்த யோக்கிய சிகாமணிகளை வைத்துதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் ஆட்சியினை முடக்கும் பணியை செய்து வருகின்றது.

உம்மை பதவி விலகக் கோருவது எங்கள் ஆசையில்லை! 2024 தேர்தல் அதனை செய்திடும். ஜனநாயக ரீதியாக செயல்படுங்கள். சர்வாதிகாரம் வென்றதாக வரலாறு இல்லை. ஆளுநர் ரவியே இனியாவது ஜனநாயகவாதியாக இருக்க முயலுங்கள். உம்மைப் போன்ற நிலைகெட்ட மாந்தரால் எங்கள் நெஞ்சுப் பொறுக்குதில்லையே என்பதை இனியாவது உணருங்கள். ●




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.11.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் உள்ள ரேலா மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்ட பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், ரேலா மருத்துவமனை இயக்குனர் மரு.முகமது ரேலா, ரேலா மருத்துவமனை தலைமை நிர்வாக அலுவலர் மரு. இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



தி.மு.க. இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை கலவை தெருவில் மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62 ‘அ’ வட்ட தி.மு.க சார்பில் பொது மக்களுக்கு நலதிட்ட உதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மண்டல குழு தலைவரும் சேப்பாக்கம் பகுதி செயலாளர் மதன் மோகன், வட்டச் செயலாளர் மகேஷ். மாமன்ற உறுப்பினர் ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அரசுக் கொறடா கோவி.செழியன் முன்னிலை! மயிலாடுதுறை மாவட்டத்தில்
### பள்ளி, கல்லூரிகளில் சட்டமன்ற நாயகர் கலைஞர் கருத்தரங்கம்!
# மாணவ - மாணவிகளுக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பரிசு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்!
### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,செ. ராமலிங்கம் எம்.பி ! எம்.பன்னீர்செல்வம் எம். எல்.ஏ., பங்கேற்பு!

நாகை நவ.30-

மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல் கல்லூரி, மயிலாடுநாகைதுறை ஏ.வி.சி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்”கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

'மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்”கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**கலைஞர் நூற்றாண்டு விழா!**


மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்”கருத்தரங்கம் நடைபெற்றது கருத்தரங்கிற்கு மாவட்ட ஆட்சி

வரும் 01.12.2023 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணி அளவில் யர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன்,மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் .நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ ராமலிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலையைத்தனர். கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசு 'பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில்சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி சத்தியசீலன்: . ஜெக வீரபாண்டியன் எம் எம் சித்திக் . "தமிழ்நாடு சட்டமன்ற கூடுதல் செயலர் திரு.ரவிச்சந்திரன், தமிழ்நாடு சட்டமன்ற இணைய செயலர் ஜெயகணேசன், இணை இயக்குநர் முனைவர்.தனராஜன்,முதன்மை கல்வி அலுவலர் அம்பிகா பதி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர்வ. யுரேகா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர். உமாமகேஸ்வரி சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜிஎன் ரவி, முத்து மகேந்திரன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே ஜி சீனிவாசன், துணை செயலாளர் மு. ஞானவேலன், எஸ் செல்வமணி, பொருளாளர் கண்ணகி பன்னீர், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்ல சேது ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், எம் அப்துல் மாலிக், அமுத விஜயரங்கன, பஞ்ச் குமார், ஏ ஜி ஜே பிரபாகர், என் இளையபெருமாள், ஞான இமய நாதன், முருகமணி, முகலூர் எம் மூர்த்தி, மங்கை எம் சங்கர், ஏ ஆர் ராஜா, கு வைத்திய நாதன், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ் , ம. சுப்பராயன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், எஸ் சாமிநாதன், ஒன்றிய குழு தலைவர்கள் ஜெயப்பிரகாஷ் காமாட்சி மூர்த்தி மகேந்திரன்சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுமாரசங்கரி குமரவேல், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வி.எஸ் என்.செந்தில், முத்து குபேந்திரன், செல்வராஜ், தீபா மனோகரன்,மயிலாடுதுறை ஒன்றிய குழு தலைவர் திருமதி.காமாட்சி மூர்த்தி, தரங்கம்பாடி செம்பனார்கோவில் ஒன்றிய குழு துணைத்தலைவர் த. பாஸ்கரன், ஒன்றிய குழு உறுப்பினர் வே.சாந்தி;

ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர். சந்திரமோகன் மயிலாடுதுறை நகர துணை செயலாளர் ஆர் கே சங்கர் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் .சிவ வீ. மெய்ய நாதன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி பபேசுகையில் சட்டமன்றம் என்பது அதிகாரம் வாய்ந்த இடம் இல்லை. சாமானிய மக்களுக்கான பணிகளை நிறை வேற்றக்கூடிய இடம். அதை செயல்படுத்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் கல்வியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற இடத்தை பெற்றிருக்கின்றோம். உங்களுக்கு சமச்சீர் கல்வியை தந்தவர் கலைஞர் அவர்கள். வசதியானவர்களுக்கு ஒரு கல்வி, ஏழைக்கு ஒரு கல்வி என்பதனை மாற்றி அனைவருக்கும் சமமான கல்வியை தந்தவர். இன்னும் ஒரு 100 ஆண்டுகளுக்கு கலைஞர் அவர்களின் புகழை எடுத்து செல்லக்கூடிய அடுத்த இலக்கை நாம் பெற்று விட்டோம். மாணவ செல்வங்களாகிய நீங்களும் வெற்றியாளர்கள் தான். கலைஞர் அவர்களின் செயல்பாடுகளை படித்தாலே நீங்களும் எதிர்காலத்தில் வெற்றியாளர்களாக, மிகப்பெரிய சாதனையாளர்களாக உருவாக முடியும். நாம் எப்படி இந்த இடத்திற்கு வந்தோம் என்று சிந்திக்க வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய படித்த இளைஞர்கள் உயர் மேலை நாடுகளில், உலகில் இருக்கக்கூடிய மொத்த நாடுகளில் 100 இடங்களில் நம் தமிழர்கள் உயர் பதவியில் இருக்கின்றனர். அதற்கு வித்திட்டவர் நம் கலைஞர் அவர்கள். நாம் ஒவ்வொருவரும் படித்து முடித்து வெளிநாடுகளில் விமானம் மூலம் செல்லும் தருவாயில் நம் தாய், தந்தையருக்கு நன்றி சொல்வோம். அது போல், அடுத்த நாம் நன்றி சொல்லக்கூடியவர் நம் கலைஞர் அவர்களுக்கு தான். அப்படி, அடித்தட்டு மக்களை உயர்த்திக் காட்டியவர் நம் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் பெருமைகளை எடுத்துச் செல்கின்ற வகையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு கொண்டிருக்கின்றார். பள்ளிக்கல்வித்துறைக்கு இன்றைக்கு அதிக நிதி ஒதுக்கி ரூ.40 ஆயிரம் கோடி வழங்கி, நம் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். 7.5 சதவீதம் அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு தந்து மருத்துவ படிப்பில் சேருவதற்காக வாய்ப்பளித்தவர். 450க்கும் மேற்பட்டவர்கள் இந்த மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர். வேளாண் கல்லூரியாகட்டும், பொறியியல் துறை ஆகட்டும், இப்படி அனைத்து உயர்படிப்பாகட்டும் அனைத்திற்கும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை கொண்டு வந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஏழை, எளிய மக்கள் அவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு கட்டணமில்லா உதவிகளை செய்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். எதிர்காலத்தில் நீங்கள் சாதனையாளர்களாக, வெற்றி வீரர்களாக களம் காண்பதற்கு இந்த மேடை உங்களுக்கு உதவும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

## இராணிப்பேட்டை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!
### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (01.12.2023-வெள்ளிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்டக் கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றியச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

**பொருள்:**

1.டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு,

2.BLA2, BLC உறுப்பினர்கள் வாக்காளர்களின் விவரங்கள் சேகரித்தல்,

3.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**அமைச்சர் ஆர்.காந்தி.**
மாவட்டச் செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.

### வல்லம் ஒன்றியம்
# துடுப்பாக்கம் ஊராட்சியில்!
### புனரமைக்கப்பட்ட குளம்: அமைச்சர் மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, நவ.30-

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் துடுப்பாக்கம் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட குளம் திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தனர்.

துடுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் மழைமேனி பாண்டியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மாரியம்மாள் விஸ்வநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிதாககட்டப்பட்ட குளத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் குளத்தின் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஏழை எளிய மக்கள் பயன்பெறுகின்ற திட்டங்களை முதலமைச்சர் .அறிவித்ததின் பேரில் குடும்பத் தலைவிக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிவித்ததன் பேரில் இன்று ஒரு கோடியே 17 லட்சம் பேர் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள வனங்களையும், நீர் நிலைகளையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொள்கை வடிவிலான அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் 33 சதவீதம் வனங்களை காப்பாற்றும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மரக்கன்றுகள் நட வேண்டும் என்று அரசு திட்டமாக செயல்பட்டு வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை ,துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம்,ஒன்றிய கவுன்சிலர்கள் விஜயா கண்ணன் சிலம்பரசி பாண்டியராஜன் ,பக்தவச்சலம், முருகன்,மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோவிந்தன், காமாட்சி சத்தியமூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் ஏழுமலை, ஏ.கண்ணன், லட்சுமி லட்சுமணன், ராமதாஸ், கதிரவன், மகளிர் அணி துணை அமைப்பாளர் பரிதா அன்வர்,பொறியாளர் அணி துணை அமைப்பாளர்மலையரசன்,ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் விமலா, செல்வம், தயாளம், மணி, குப்பம்மாள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.ஊராட்சி செயலாளர் பூபால் நன்றி கூறினார்.

### அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில்
# டி.என்.பி.எல். தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்து!
### மு.சண்முகம் எம்.பி., தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, நவ.30-

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின். 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022-2026) 27.11.2023 அன்று, தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.சாய்குமார் முன்னிலையிலும் மற்றும் எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஆர்.கமலக் கண்ணன், செயலாளர், அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் டி.கே.ரங்கராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ ஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலாளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்களும் ஒருமித்த கருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

வரலாற்று சிறப்பு மிக்க ஊதிய உயர்வு ஒப்பந்தம் சிறப்பம்சங்கள் வருமாறு:-

1. அடிப்படைச் சம்பளத்தில் 30 சதவீதம் உயர்த்தி, திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப் பட்டது.

2. வருடாந்திர ஊதிய உயர்வு, அடிப்படைச் சம்பளத்தில் 3 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

3. மாறும் அகவிலைப் படி 0.29 சதவீதமாகவும், அதன் உச்சவரம்பு ரூ.63/ ஆக உயர்த்தப்பட்டது.

4. 2015-ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மாறா அகவிலைப்படி(FDA) வழங்கப்படும்.

5. வீட்டு வாடகைப்படி, ஆலைக் குடியிருப்பில் உள்ள பணியாளர்களுக்கு 12 சதவீதமாகவும், ஆலைக் குடியிருப்பில் இல்லாத பணியாளர்களுக்கு 15 சதவீதமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

6. அனைத்து (கொடுப்பனவுகள்) அலவன்ஸ்களிலும் சென்ற 9 ஒப்பந்தங்களை காட்டிலும் நல்ல உயர்வு நிர்ணயிக்கப்பட்டது.

7. தொழிலாளர்களுக்கு 100% ஈடுசெய்யப்படும் தீவிர நோய்களின் பட்டியலில் கல்லீரல் மற்றும் கணைய நோய்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

8.பெண் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் பேறு கால விடுப்பு, LTC விடுமுறை கணக்கிடுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9. 33 வருடம் நிறைவு செய்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் கொடுக்கப்படும்.

10.பணி உயர்வில் 4,5 மற்றும் 6வது கிரேடுகளில் 3 ஆண்டுகள் தளர்வு, கொடுக்க நிர்ணயிக்கப்பட்டது.

11. பட்டம் படித்து வேலையில் சேர்ந்து, 20 ஆண்டுகள் பணி செய்தவர்களுக்கு 1 படிநிலை பணி உயர்வு கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்டது.

12. ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் (விபத்து மற்றும் இயற்கை மரணம்) அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் அவர்களின் சிறப்புரையில், ஒப்பந்த தொழிலாளர்களின் பல ஆண்டு கால கோரிக் வெளியிடப்பட்டது.

# தமிழ்நாட்டில் மிகவும் நல்ல மருத்துவக் கட்டமைப்பு உள்ளது!
### தமிழ்நாடு அரசுக்கு உச்சநீதிமன்றம் பாராட்டு!

புதுடெல்லி, நவ.30-

கடந்த 2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நெருங்கிய நேரத்தில், மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் ஐந்து ஆண்டுகளாகியும் எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்ட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணியை விரைவில் தொடங்க உத்தரவிடக்கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதான்சு துலியா அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கறிஞர் ஜெயசுகின் ஆஜராகி, 9 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்கப்பட்டு விட்டதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் தொடங்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பல மாநிலங்களில் இது போன்ற பிரச்சினைகள் நிலவுகிறது என்றும், அடிக்கல் நாட்டிவிட்டு கட்டுமானப் பணிகளை தொடங்குவதில்லை என்றும் அதிருப்தி தெரிவித்தனர்.

மேலும், தமிழ்நாட்டில் மிகவும் நல்ல மருத்துவக் கட்டமைப்பு உள்ளதாக தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என கூறிய நீதிபதிகள், நிர்வாக ரீதியாக அரசை அணுகும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தி வழக்கை முடித்து வைத்தனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவாரூரில் பேரிடர் மேலாண்மைதுறையின் சார்பில் இலவச வீட்டுமனைப்பட்டாவினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார். எம். செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஊராட்சிபெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, உமாராணி பாலச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் உடனிருந்தனர்.

## சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா காட்சிகள்!






















சேப்பாக்கம் – திருவல்லிக் கேணி தொகுதியில் வெலிங்டன் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவை திறந்து வைத்து டி.டி.கே சாலையில் அமைந்துள்ள. சென்னை மாநகராட்சி நகர்ப்புற மகளிர் காப்பகத்தில், மூத்த குடிமக்களுடன் கேக் வெட்டி தனது பிறந்த நாளை கொண்டாடி, மேலும், பல்வேறு நலத்திட்ட உதவி களை கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். மேலும் மகளிர் சுய உதவிக்குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பெற்றுக்கொண்டு அன்போடு வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். அதே போன்று பைகிராப்ட்ஸ் சாலை அருகே அமைந்துள்ள மாற்றுத்திறனாளி மகளிருக்கான மாநகராட்சி இரவு நேர காப்பகத்தில், நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி, மகளிர் சுய உதவி குழுக்களின் சகோதரிகள் தயாரித்த பொருட்களை, மாற்றுத்திறன் கொண்ட மகளிருக்கு வழங்கியதோடு அன்போடு வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வின் போது அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்.**





# இடம் பொருள் கலைஞர் 46

# கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்

## பொன்விழா காணும் 99 ஆண்டு ஒப்பந்தம்!



‘தென்னிந்தியாவின் மான் செஸ்டர்’ என்ற பெருமைக்குரியது தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டம். ஜவுளி, கல்வி, மருத்துவம் என சகல துறைகளிலும் இன்று போலவே அன்றும் வேகமாக வளர்ந்து வந்தது இந்த மாநகரம். நகரம் வளர்ச்சி அடைய அடைய, மக்கள்தொகையும் பெருகிக் கொண்டே வந்தது.

ஒரு குறிப்பிட்ட பகுதி, நகர்மயமானால், அந்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகும் என்றாலும், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெரும்பாலான அரசுகள் மறந்துவிடுகின்றன. அப்படித்தான் 50 மற்றும் 60-களில் தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியும் மறந்துவிட்டிருந்தது.

கோவை மாவட்ட மக்கள், தங்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு, சிறுவாணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்தபடி இருந்தனர்.

கோவையில் சிங்காநல்லூர் பகுதியில் இருந்து தன் திரைப்படப் பணிகளை மேற்கொண்டவர் அல்லவா கலைஞர்..? அதனால் அந்த மக்களின் கோரிக்கையில் இருந்த நியாயம் புரிந்தது. ஆகவே, அவர்களது குரலை 1966-ஆம் ஆண்டு மார்ச் 4 அன்று, சட்டமன்றத்தில் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிரொலித்தார்.

“சிறுவாணித் திட்டம் என்பது தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. கோவை நகரத்திற்கு 22 மைல் தூரத்தில் உள்ளது. கேரள மாநிலத்துடன் சேர்ந்துள்ள சிறுவாணிப் பகுதியிலிருந்து கேரள மாநில அரசின் உதவியோடு திட்டத்தை நிறைவேற்றி, கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திட வேண்டும்" என்றார்.

### வறட்சியில் எழுந்த சபதம்

கலைஞர் சட்டமன்றத்தில் வைத்த கோரிக்கையை அன்றைய அரசு நிறைவேற்றவில்லை. பிறகு 1969-இல் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அந்த ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அப்போது கோவை மாநகர மக்களுக்கு சிறுவாணி நீர்த் திட்டத்தை நிறைவேற்றி, குடிநீர் வசதி செய்து தருவேன் என்று உறுதி பூண்டார்.

தொடர்ந்து, 1969-ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதி அன்று, திருவனந்தபுரம் சென்று கேரள மாநில முதலமைச்சர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு அவர்களை சந்தித்து சிறுவாணித் திட்டம் குறித்து, பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக இருமாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

அவற்றின் அடுத்த கட்டமாக, ‘கோயம்புத்தூர் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்’ என்ற பெயரில், சிறுவாணி குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 -ஆம் தேதி அன்று நடைபெற்றது. அப்போது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர், “பெயர்தான் சிறுவாணியே தவிர, இப்பிரச்சினை கொடுத்த கஷ்டங்கள் பெரிய அளவாகும்” என்றார்.

### பனகல் அரசர் வழியில்...

இந்தத் திட்டம் தொடர்பாக 1970-இல் வெளியான செய்திக் குறிப்பு ஒன்றில், “இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவாணிப் பள்ளத்தாக்கில் 6,500 இலட்சம் கன அடி கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டி, குடிநீர் எடுக்க வசதியுள்ள அமைப்பு மூலம் தற்போதுள்ள சுரங்கப்பாதை வழியே, கோவை மாவட்ட எல்லைக்குள் உள்ள

நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும். சுத்திகரிக்கப்பட்ட பின்னர், 33 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர், கோவை நகருக்குக் கொணர்ந்து விநியோகிக்கப்படும். கோவை நகரத்துக்கும், நகரை ஒட்டியுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்களின் நெடுநாள் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ.6.33 கோடி ரூபாயும், ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவுக்கு ரூ.15 இலட்சமும் ஆகும். இம்முழுத் திட்டத்தையும் மூன்று வகையாகப் பிரித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது கிடைக்கும் குடிநீர் அளவு, ஐந்து மடங்கு அதிகமாகும்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவின் போது, “நீதிக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் குடி தண்ணீர் திட்டத்துக்கு இங்கே இதே இடத்தில் 1935-இல் அடிக்கல் நாட்டினார் என்பதைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வனாக இங்கே வந்து சிறுவாணி குடி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!” என்றார்.

மேலும், “ஒரு மாதம் கழித்து, கருணாநிதி அடிக்கல் நாட்டினாரே, எங்கே தண்ணீர்? என்று கேட்பார்கள். அப்படிக் கேட்பவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நிறைவேற 1.5 ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது நானும் வந்து உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்வேன்” என்றார் கலைஞர்.

### தண்ணீர்-அரிசி-மின்சாரம்

அந்தத் திட்டம் வேகமாக செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், கேரளத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு, அச்சுதமேனன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19-ஆம் தேதி அன்று, இருமாநில அரசுகளுக்கிடையே, 99 ஆண்டுகளுக்கு முழுமையாக செயலில் இருக்கக்கூடிய சிறுவாணி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதன்படி கோவை நகரின் வீட்டு, சமூக மற்றும் தொழிற்சாலைப் பயன்பாடுகளுக்குத் தேவையான நீரைத் தேக்கிட (1,300 மில்லியன் கன அடி), தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசு சிறுவாணி அணையைக் கட்டி அதற்கான கேரள மாநில நிலத்தை தமிழ்நாடு அரசிடம் பராமரிப்புக்கு ஒப்படைத்தது.

தான் சொன்னது போலவே, அந்த ஆண்டு கோவையில் நடைபெற்ற சிறுவாணித் திட்டத்தின் திறப்புவிழாவில் கலந்துகொண்டார் கலைஞர். அவருடன், அச்சுதமேனனும் கலந்துகொண்டார். அப்போது பேசிய கலைஞர், “கேரளமும் தமிழ்நாடும் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள். இவை ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உதவி கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் கேரளத்திற்கு ஓர் ஆண்டிற்கு 15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருக்கிறது தமிழகம்” என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய அச்சுதமேனன், “தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வருகிறபோது, மின்சாரம் கொடுக்க கேரளம் தயாராக இருக்கிறது” என்றார்.

இவ்வாறு அந்த காலத்தில் அண்டை மாநிலங்களுக்கிடையே ஒரு நல்லுறவு நிலவியதற்கு இன்றும் சாட்சியாக இருக்கிறது சிறுவாணி..!

...வலம் வருவோம்

சிறுவாணி குடிநீர்த் திட்ட திறப்பு விழாவில், அன்றைய குடிநீர் வாரியத் தலைவராக இருந்த செ.கந்தப்பன் பேசும் போது, “சிறுவாணியிலிருந்து, கோவைக்குப் போதுமான அளவு குடிதண்ணீர் கிடைக்க வழி வகுத்துள்ளார் முதல்வர். குடிநீர்ப் பிரச்சினை இன்றோடு தீர்ந்துவிட்டது. எனவே, முதல்வருக்கு, ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை, உங்கள் சார்பாக அளிக்கலாம் என்று எண்ணி உள்ளேன்...” என்றார்.

அவருக்குப் பின் கலைஞர் உரையாற்றும்போது, “என் அருமை கந்தப்பன், ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை எனக்கு அளிக்கயிருப்பதாகக் கூறினார். ஏற்கெனவே எனக்குள்ள பல பட்டங்கள், மாற்றுக் கட்சிக்காரர்களிடம் சிக்கி, என்ன பாடுபடுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ‘சிறுவாணி வென்றாய்’ என்ற பட்டத்தை, நாளை அவர்கள், ‘சிறுவா... நீ வென்றாய்!’ என்று, ஏளனமாய்ப் பேசக்கூடும். ஆகவே, நான் சிறுவனாக மாற ஆசைப்படவில்லை” என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

## அச்சில் ஏறாத கவிதை!

54-வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா, கோவாவில் நவம்பர் 20-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை நடைபெற்றது. விழா நாட்களில், ‘தி பீக்காக்’ எனும் பெயரில் திரைப்பட விழா சார்ந்த செய்திகள், புகைப்படங்கள், பிரபலங்களின் படைப்புகள் ஆகியவற்றைத் தாங்கி வரும் நாளிதழ் வெளியிடப்படுவது வழக்கம்.

அந்த நாளிதழில், ஞாயிறு இதழில் (நவம்பர் 26) மறைந்த விஷ்ணுசூர்யா வாக் என்ற தலித் கவிஞரின் கவிதை, சித்தேஷ் கவுதம் எனும் சாதி எதிர்ப்பு ஓவியரின் ஓவியத்துடன் அச்சிடப் படுவதற்குத் தேர்வு செய்யப் பட்டிருந்தது. ஆனால், ஞாயிறு இதழில் அந்தக் கவிதை இடம் பெறவில்லை. ஓவியம் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

இதற்கு திரைப்பட விழாவை நடத்தும் அதிகாரிகள் எந்த விளக்கத்தையும் கொடுக்க வில்லை. இதைத் தொடர்ந்து அந்தக் கவிஞருக்கு ஆதரவாகப் பிரபலங்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

அந்தக் கவிதையின் தலைப்பு ‘செக்யூலர்’. அதாவது, மதச்சார் பின்மை. அந்தக் கவிஞர் வாக் யார் தெரியுமா...? கோவாவின் செயின்ட் ஆந்த்ரே தொகுதியின் பா.ஜ.க. முன்னாள் எம்.எல்.ஏ..! சொந்தக் கட்சி, தலித் படைப்பாளிகளுக்கே இதுதான் நிலை.

## :ப்ளாஷ்பேக்



### சிவப்புக் கம்பள வரவேற்பு!

மண்டல் ஆணையை நிறைவேற்றி, வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை நிறைவேற்றியதற்காக இந்தியா முழுவதும் வி.பி சிங் அவர்களுக்கு எதிர்ப்பு கிளம்பியது. தமிழ்நாடு மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது. தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காரணத்தால், சமூக நீதிக் காவலர் வி.பி சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முழுக்க சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது உளுந்தூர்பேட்டையில் அளித்த வரவேற்பில், தலைவர் கலைஞர், ‘மண்டல் நாயகர்’ வி.பி சிங், எஸ்.ஆர்.பொம்மை ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



இராமலிங்கம்

**-மருதூர் ஏ.இராமலிங்கம்,**
**இணைச் செயலாளர்,**
**ஆதிதிராவிடர் நலக்குழு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மீண்டும் கலைப்பயணம்!

**1967-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை கலைஞர் திரையுலகப் பணிகளில் நேரடியாகப் பங்குபெறவில்லை. 1978-ஆம் ஆண்டு, இயக்குநர் [கிருஷ்ணன்] பஞ்சு அவர்கள் இயக்கிய படம் மூலம் மீண்டும் திரையுலகப் பயணத்தைத் தொடங்கினார். கலைஞர் கதை, வசனம் எழுதிய அந்தப் படத்தின் தலைப்பு ‘நெஞ்சுக்கு நீதி’. அவர் எழுதிய நூலின் தலைப்பையே திரைப்படத்தின் பெயராக சூட்டப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 315




**எழுத்து : கோவி.லெனின்**
**ஓவியம் : கி.சொக்கலிங்கம்**

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131